


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 213 16.03.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 213 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(16-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-2
பிறை: தேய்பிறை
திதி
துவாதசி காலை 8.56 வரை
பிறகு திரயோதசி.
நட்சத்திரம்:
அவிட்டம் மறுநாள்
விடியற்காலை 5.55 வரை
பிறகு சதயம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 - 12.00 மணி.
சூலம் -கிழக்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | ஜெயம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | கடமை |
| கடகம் | நிம்மதி |
| சிம்மம் | அன்பு |
| கன்னி | பாசம் |
| துலாம் | ஆதாயம் |
| விருச்சிகம் | காரிய சித்தி |
| தனுசு | பெருமை |
| மகரம் | செலவு |
| கும்பம் | பரிசு |
| மீனம் | களிப்பு |

# தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்.23ல் ஒரே கட்டமாக தேர்தல்: மே.4ல் வாக்கு எண்ணிக்கை




**சென்னை, மார்ச் 16:**

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23 ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் டெல்லியில் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறியதாவது: தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

வேட்புமனு தாக்கல் மார்ச் 30-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்.7-ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்.9-ம் தேதி கடைசி நாள். புதுச்சேரியில் ஏப்ரல் 9ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

தமிழகத்தில் 75,032 வாக்குச் சாவடிகள் உள்ளன. தமிழகத்தில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்தில் மே 10 ஆம் தேதியுடன் சட்டப்பேரவைக்கான பதவிகாலம் முடிவடைகிறது. வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு சதவீதம் அறிவிக்கப்படும். வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்கள் இடம்பெறும் என ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி, கேரளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் தேதியை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையிலான தேர்தல் ஆணையர்கள் இன்று புது டெல்லியில் அறிவித்தனர்.

இதன்படி தமிழகத்தில் ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு வெளியான நிலையில், தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

தேர்தலுக்கு தயாராகும் கூட்டணிகள்:

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணியில் சில கட்சிகளுக்கு ஏற்கெனவே தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மற்ற கட்சிகளுடன் தொகுதி ஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

அதிமுக-பாஜககூட்டணியும் தேர்தலுக்கு தயாராகி வருகிறது. கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக, அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் பணிகளை தொடங்கி உள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து களத்தில் இறங்கியுள்ளார்.

### வேட்பு மனுத்தாக்கல் தொடக்கம் - மார்ச் 30-ம் தேதி

தமிழக சட்டசபை தேர்தல் - ஏப்ரல் 23-ம் தேதி
வேட்பு மனுத்தாக்கல் தொடக்கம் - மார்ச் 30-ம் தேதி
மனுத்தாக்கலுக்கு கடைசி நாள் - ஏப்ரல் 6-ம் தேதி
வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை - ஏப்ரல் 7-ம் தேதி
மனுக்கள் திரும்ப பெற கடைசி நாள் - ஏப்ரல் -9-ம் தேதி
வாக்குப்பதிவு - ஏப்ரல் 23-ம் தேதி
வாக்கு எண்ணிக்கை - மே 4-ம் தேதி

### அசாம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு ஏப்ரல் 9ஆம் தேதி தேர்தல்

அசாம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு ஏப்ரல் 9ஆம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. அசாம், கேரளம், புதுச்சேரியில் வேட்புமனு தாக்கல் மார்ச். 16-ஆம் தேதி தொடங்குகிறது. வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசித் தேதி மார்ச். 23. வேட்புமனுக்கள் பரிசீலனை மார்ச் 24-ஆம் தேதி நடைபெறும். வேட்புமனுவை திரும்பப் பெற கடைசித் தேதி மார்ச் 26.

## “மேற்கு வங்கத்தில் கொடுங்கோல் ஆட்சி அகற்றப்படும்”

**குவாஹாட்டி/ கொல்கத்தா, மார்ச் 16:**

மேற்கு வங்கத்தில் கொடுங்கோல் ஆட்சி அகற்றப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அசாமின் கோக்ரஜர், குவாஹாட்டி நகரங்களில் நேற்று நலத்திட்ட விழாக்கள் நடைபெற்றன. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இரு விழாக்களிலும் ரூ.24,250 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

இதைத் தொடர்ந்து அசாமின் சில்சார் நகரில் நேற்று நடந்த நலத்திட்ட விழாவில் பிரதமர் மோடி பங்கேற்று ரூ.23,550 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் அப்போதைய காங்கிரஸ் அரசு அக்கறை செலுத்தவில்லை. மத்தியில் பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு வடகிழக்குக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

செமி கண்டக்டர் உற்பத்தி உட்பட பல்வேறு தொழில்கள் அசாமில் தொடங்கப்பட்டு உள்ளன. ஐஐடி, ஐஐஎம் கல்வி நிறுவனங்கள், எய்ம்ஸ் மருத்துவமனை ஆகியவை அமைக்கப் பட்டுள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் போர்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் உலகம் முழுவதும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த பாதிப்புகளை குறைக்க மத்திய அரசு அதிதீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த இக்கட்டான நேரத்தில் காங்கிரஸ் கட்சி பொறுப்புடன் செயல்படவில்லை.

தற்போதுகூட நாட்டின் நலனுக்கு எதிராக அந்த கட்சி செயல்படுகிறது. மக்களிடையே பொய்கள், வதந்திகளை பரப்பி வருகிறது. இந்தியாவின் வளர்ச்சியை விரும்பாத சில அந்நிய சக்திகளின் ஊதுகுழலாக காங்கிரஸ் செயல்படுகிறது. அந்த



கட்சி குறித்து பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

இதைத் தொடர்ந்து மேற்குவங்க தலைநகர் கொல்கத்தாவில் நடைபெற்ற அரசு நலத்திட்ட விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது ரூ.18,680 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார், விழாவில் அவர் பேசியதாவது:

மேற்கு வங்கத்தில் சாலைகள், உள்கட்டமைப்புகள் தொடர்பாக பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அம்ருத் பாரத் திட்டத்தின் கீழ் மேற்கு வங்கத்தின் 6 ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. புதிய விரைவு ரயில் சேவை தொடங்கப்பட்டு உள்ளது. கொல்கத்தா, ஹால்டியா துறைமுகங்களின் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஒட்டுமொத்த கிழக்கு இந்தியாவும் வளர்ச்சி அடையும்.

மேற்கு வங்கத்தில் தற்போது கொடுங்கோல் ஆட்சி (திரிணமூல் காங்கிரஸ் ஆட்சி) நடைபெற்று வருகிறது. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் இந்த கொடுங்கோல் ஆட்சி அகற்றப்படும். மேற்கு வங்க மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். இன்றைய பொதுக்கூட்டத்தில் மக்கள் பங்கேற்பதை தடுக்க மிகப் பெரிய அளவில் வன்முறை சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன. ஆனால் அவற்றை தாண்டி பெருந்திரளான மக்கள் இங்கு கூடியுள்ளனர். விரைவில் காட்டாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## நேபாளத்தில் பஸ் விபத்து; தமிழகத்தில் இருந்து ஆன்மீக சுற்றுலா சென்ற 7 பேர் பலி

**காத்மண்டு, மார்ச் 16:**


நேபாளத்தின் கோர்கா மாவட்டத்தில், இந்தியாவை சேர்ந்த புனித யாத்ரீகர்கள் 14 பேர் உள்பட 16 பயணிகளுடன் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அவர்கள் அனைவரும் மனகாமன கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்து விட்டு பஸ்சில் திரும்பி கொண்டிருந்தனர்.

அப்போது, மலை பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த அந்த பஸ் சாஹித் லகான் என்ற கிராம பகுதியில் கந்தார் என்ற இடத்தில், 200 அடி ஆழ பள்ளத்தில் திடீரென கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பஸ்சில் பயணித்த 7 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள். இவர்கள் தமிழகத்தில் இருந்து ஆன்மீக சுற்றுலாவுக்காக சென்றவர்கள் என தகவல் தெரிவிக்கின்றது.

அவர்களில் 2 பேர் பெண்கள். 5 பேர் ஆண்கள் ஆவர். இதுதவிர 7 பேர் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு அன்புகைரேனி பகுதியிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் பஸ் ஓட்டுநர்



காயம் எதுவுமின்றி தப்பி விட்டார். உதவியாளருக்கு காயங்கள் ஏற்பட்டு உள்ளன. விபத்து பற்றி விசாரணை நடந்து வருகிறது.

அந்த பஸ் தனஹுன் மாவட்டத்திலுள்ள அன்புகைரேனி பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தது. 2024-ம் ஆண்டு ஆகஸ்டில் இதே அன்புகைரேனி பகுதியில் இந்தியாவை சேர்ந்த புனித யாத்ரீகர்கள் சென்ற பஸ் விபத்தில் சிக்கியதில் 27 பேர் பலியானார்கள்.

## அந்தமானில் ரூ.36,000 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் அழிப்பு




**விஜயபுரம், மார்ச் 16:**

அந்தமான் தீவு அருகே கடந்த 2024-ம் ஆண்டு நவம்பர் 23-ம் தேதி சென்ற மர்ம படகு ஒன்றை இந்திய கடலோர காவல் படையினர் பிடித்து சோதனை செய்தனர்.

அதில் 1,500 பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவை மெதாம்ஃபெட்டமின் போதைப் பொருள் என ஆய்வில் தெரிய வந்தது. 6,000 கிலோ எடையுடன் இருந்த இந்த போதைப் பொருளின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.36,000 கோடி. இதையடுத்து அந்த படகில் இருந்த மியான்மர் நாட்டைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் அந்தமான் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலையில், 6 ஆயிரம் கிலோ எடையுள்ள போதைப் பொருட்களை அழிக்கும் பணி காவல் துறை உயரதிகாரிகள் முன்னிலையில் தொடங்கின.

## மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு : ஒப்பந்தம் கையெழுத்து

**சென்னை, மார்ச் 16:**

தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான ஊதிய உயர்வு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

“தமிழ்நாடு முதல்-அமைச்சரின் ஆணைக்கிணங்க, போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சரின் வழிகாட்டுதலின்படி 01.12.2023 முதல் தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட குழுவினருடன், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் இதர சங்க நிர்வாகிகளுடன் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தி இறுதியாக ஊழியர்களுக்கு, 01.12.2023-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 6 சதவீதம் ஊதிய உயர்வும், 01.12.2023-ம் நாளன்று, 10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கு பணிப் பலனாக (Service Weightage) 01.12.2023-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3 சதவீதம் ஊதிய உயர்வும் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்படுகிறது.





மேலும் 01.12.2023 அன்று 10 வருடங்கள் பணி முடித்த அலுவலர்களுக்கு 01.12.2023-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3 சதவீதம் பணிப் பலனாக (Service Weightage) வழங்குவது எனவும் அறிவிக்கப்படுகிறது. மேலும், அலுவலர்களுக்கு ரூ.3,000/- முதல் ரூ.7,000/- வரை சிறப்புப்படி வழங்கவும் ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து, தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் அலுவலர் சங்கம் நிர்வாகிகள் ஆகியோர் 13.03.2026-ம் அன்று தமிழ்நாடு மின்வாரிய தலைவர் முன்னிலையில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இறுதி கட்ட பேச்சு வார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டது. இவ்வூதிய உயர்வு மூலம் ஏற்படும் நிலுவைத் தொகை 01.12.2023-ம் நாள் முதல் கருத்தியலாகக் (Notional) கணக்கிட்டு, 01.12.2025-ம் நாள் முதல் பணப் பலன்கள் வழங்கவும். மேலும், இடைப்பட்ட காலத்திற்கு அதாவது 01.12.2023 முதல் 30.11.2025 வரை கருணைத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் கணக்கிட்டு 24 மாதங்களுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், நிலுவை தொகையினை ஒரே தவணையாக வழங்கவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வூதிய உயர்வு வாயிலாக, அனைத்து ஊழியர்களும் மற்றும் அலுவலர்களும் பயன் அடைவார்கள் என்பதனை கூடுதலாக தெரிவிக்கப்படுகிறது.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# சேஷ வாகனம்



ஸ்ரீ யதோக்தகாரி ஸ்வாமி விஸ்வாவசு வருட பிரம்மோற்சவம் நான்காம் திருநாள் காலை நாள் பங்குனி (15/3/26) திருவெஃகா திவ்யதேசம். காஞ்சிபுரம்

## செல்லூர் சுயம்பு வாழவந்த அம்மன் கோவிலில் பங்குனி மாதம் பிறப்பு பூஜை



**பரமக்குடி, மார்ச் 16:** ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ளது செல்லூர் இங்கு பிரசித்தி பெற்ற ஸ்ரீ சுயம்பு வாழவந்த அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். பங்குனி மாதம் முதல் நாள் முன்னிட்டு சிறப்பு மஞ்சள் அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடைபெற்றது. இதில் அம்மனுக்கு தைலகாப்பு அலங்காரம் செய்யப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டுபக்த்தர்களுக்கு வழங்கப்பட்டது. கோவிலில் உள்ள விநாயகர், முருகன் ஸ்ரீசிவகாளி, ஆதி முத்துமாரி அம்மன் பெரிய கருப்பு சின்ன கருப்பு, பேச்சியம்மன், நாகம்மன் ஸ்தபகன்னிமார்கள், மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

## ஆதிகேசவ பெருமாள் பல்லக்கு அலங்காரம்



சென்னை வெஸ்ட் மாம்பலம் ஆதிகேசவ பெருமாள் கோவிலில் நேற்று காலை பல்லக்கு அலங்காரம்.

## மானாமதுரையில் திமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்



**மானாமதுரை மார்ச் 16:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிவகங்கை ரோட்டில் உள்ள காந்தி சிலை முன்பு திமுக கூட்டணி கட்சிகள்' சார்பாக "சமையல் எரிவாயு சிலிண்டர் உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய மத்திய அரசை வன்மையாககண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மானாமதுரை நகராட்சி தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி, திமுக ஒன்றிய செயலாளர்கள் ராஜாமணி , அண்ணாதுரை ச மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சஞ்சய் , காங்கிரஸ் நகர் செயலாளர் நகராட்சி உறுப்பினர் புருஷோத்தமன் திமுக நகர் கழக செயலாளர் பொன்னுச்சாமி, நகர் மன்ற தலைவர் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

'துப்பில்லை துப்பில்லை சமையல் சிலிண்டர் பிரச்சனையை தீர்க்கத் துப்பில்லை', 'கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மத்திய அரசைக் கண்டிக்கிறோம்',' ஆர்ப்பாட்டத்தில் கோஷம் எழுப்பினார்கள். இதில் திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்புவனம் இளையான்குடி பேரூராட்சி பகுதியில் திமுக கூட்டணி கட்சியினர் கண்டண ஆர்பாட்டம்





**மானாமதுரை மார்ச் 16:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் ஒன்றிய நகர மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் தமிழ்நாட்டுக்கு நிதி இல்லை. அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டர் இல்லை என ஒன்றிய அரசையும் என் டி ஏ கூட்டணி கட்சிகளையும் கண்டித்து திருப்புவனம் தினசரி மார்க்கெட்டில் மாவட்ட கழக துணை செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் கண்டன கோஷங்களை எழுப்பினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள். திமுக ஒன்றிய செயலாளர்கள் வசந்தி சேங்கை மாறன். கடம்பசாமி. நகர் செயலாளர் நாகூர்கனி. பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். காங்கிரஸ் மாரிமுத்து. சிவக்குமார். நடராஜன். மதிமுக பாலுச்சாமி. முத்துஇருளூ. தேமுதிக. காந்தி. செட்டியம்பலம். சிபிஐஎம். ஈஸ்வரன். ஜெயராமன். சிபிஐ மோகன். சுந்தரலிங்கம். விசிக கண்ணன். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பொற்கோ. ஒன்றிய நிர்வாகிகள். ஏனாதி ராமலிங்கம். லாடனந்தல் சுப்பையா. சங்கங்குளம்ஈஸ்வரன். சொட்டதட்டி சக்தி முருகன் கலியாந்தூர் இளங்கோவன். மாங்குடி வெங்கடேசன் பூவந்தி அக்னிராஜ் மடப்புரம் மகேந்திரன் கரிசல்குளம் ராமு. நகரத்துணைச்செயலாளர் மீனாட்சி சுந்தரம். தொ. மு.ச பிச்சை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுகரசு. நகர இளைஞரணி அமைப்பாளர் கண்ணன். துணை அமைப்பாளர்கள். காளிதாஸ். கணேசபிரபு. திருப்பதி. மாணவரணி பாண்டியர் கிருஷ்ணன். தொண்டரணி ராஜா. விளையாட்டின் செந்தில். கவுன்சிலர்கள். வேல்பாண்டி. மாரிதாசன். சித்ராதேவி ஆறுமுகம். பத்மாவதி முத்துக்குமார். ராமலட்சுமி பாலகிருஷ்ணன். மகளிர் அணி சித்ரா. ஆகியோர் கலந்து கொண்டார்கள். இதேபோல் இளையான்குடி பேரூராட்சி பகுதியில் இளையான்குடி முன்னாள் எம்எல்ஏ சுப. மதியரசன் தலைமையில் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பேரூராட்சி தலைவர் நஜிமுதீன், கண்ணமங்கலம் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் சுப தமிழரசன் உள்பட திமுக, காங்கிரஸ், தேமுதிக மற்றும் திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# திருக்குறள் ஒப்புவித்த மாணவியருக்குப் பாராட்டு விழா



**சென்னை, மார்ச் 16:** முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கன்னியாகுமரியில் குறளாசான் வள்ளுவருக்குச் சிலை நிறுவிய வெள்ளி விழாவின் கொண்டாட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள், மாணவர்கள் இடையே திருக்குறளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தை அறிவித்தார்.

தமிழ்வளர்சித் துறையின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு குழு அமைத்து திருக்கறள் வகுப்புகள் நடத்த அரசாணை பிறப்பிக்கப் பட்டது.

அதன் படி கிருட்டிடனகிரி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், தமிழ்வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் செயலாளராகவும் பாவலர் கருமலைத்தமிழாழன், கவிஞர் அ.க. இராசு ஆகியோர் உறுப்பினராகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டு ஒசூர் வட்டம் முழுவதும் பள்ளிகளில் திருக்குறள் வகுப்புகள் நடத்தப்பட்டன.

ஒசூர் அரசு பெண்கள் மேநிலைப் பள்ளியில் 11-3-2026 புதன் கிழமை பள்ளித் தலைமையாசிரியர் குறள் வாசுகி தலைமையில் நடந்த நிறைவு விழாவில் அதிக எண்ணிக்கையில் திருக்குறள் ஒப்புவித்த மாணவியர் நிசாந்தி, சஞ்சனா, அமிர்தா, சாரு, கீர்த்திகா ஆகியோர்க்குக் கிருட்டிடனகிரி மாவட்டத் தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் கனிமொழி பாராட்டிச் சான்றிதழ் வழங்கினார்.

திட்டக் குழு உறுப்பினர்கள் பாவலர் கருமலைத்தமிழாழன், கவிஞர் அ.க. இராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பள்ளி உதவி தலைமையாரியர் நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்தார்.

### 5 மாநில சட்டமன்றத் தேர்தல்

# தமிழகத்திற்கு ஒரேகட்டமாக ஏப்ரல் 23ம் தேதி வாக்குப்பதிவு

**புதுடெல்லி, மார்ச் 16:** தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களிலும் சட்டசபை பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது.



புஷ்கர் ஸ்ரீ ராம வைகுண்ட நாத ஸன்னிதி பிரம்மோற்பசம் அச்வவாகனம் புரபாடு.

தமிழகத்தில் தற்போதைய 16-வது சட்டசபையின் பதவிக்காலம் மே 10-ந்தேதி முடிவடைகிறது. புதுச்சேரி சட்டசபையின் பதவிக்காலம் ஜூன் மாதம் 15-ந்தேதியும், மேற்கு வங்காள மாநில சட்டசபையின் பதவிக்காலம் மே 7-ந்தேதியும், அசாம் மாநில சட்டசபை மே 20-ந்தேதியும், கேரள சட்டசபை மே 23-ந்தேதியும் நிறைவு பெறுகிறது.

இந்த 5 மாநிலங்களிலும் ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் தேர்தலை நடத்தி முடித்திட இந்திய தேர்தல் ஆணையம் தீவிரமாக பணியாற்றி வருகிறது.

5 மாநிலங்களிலும் சட்டசபை தேர்தலை நடத்துவதற்கான அனைத்து பணிகளும் முடிந்துள்ளதால் தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் தேதி அறிவிப்பு தொடர்பாக




டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையத்தில் பத்திரிகையாளர் சந்திப்புக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டசபை தேர்தலுக்கான அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது. டெல்லியில் இந்திய தேர்தல் தலைமைத்தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் செய்தியாளர்களை சந்தித்து வருகிறார்.

தமிழகத்திற்கு வரும் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மே 4ம் தேதி அன்று வாக்குஎண்ணிக்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகாபூர்ணாஹூதி



திருப்பத்தூர் மாவட்டம் கேரட்டி கிராம் ஸ்ரீவெங்கட ராமநாசுவாமி மகாஸம்போஷணம் மகாபூர்ணாஹூதி.

## சிவகங்கையில் காங்கிரஸ் கட்சி மாநில பொதுச் செயலாளர் சிஆர். சுந்தரராஜன் தலைமையில் ஊர்வலமாக வந்து திமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்





**சிவகங்கை மார்ச் 16 :** சிவகங்கை மாவட்டம் சிவகங்கையில் காங்கிரஸ் கட்சி மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சிஆர். சுந்தரராஜன், சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை.ஆனந்த் தலைமையில் திமுக காங்கிரஸ் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஊர்வலமாக வந்து சண்முகராஜா கலை யரங்கம் முன்பு மத்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதில் சமையல் கியாஸ் தட்டுப்பாட்டை கண்டித்தும், தமிழக அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்காததை கண்டித்து கோஷம் எழுப்பினார்கள். இதில் திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## 12 ஆண்டுகளுக்கு பிறகு முல்லைப்பெரியாறு அணையில் தமிழன்னை படகுக்கு அனுமதி



**கூடலூர், மார்ச் 16:** கேரளா அரசால் 12 ஆண்டுகளாக தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட தமிழன்னை படகு பயன்பாட்டிற்கு வந்தது.

பெரியாறு அணையில் தமிழக பொதுப்பணித்துறை சார்பில் இயக்கப்பட்ட நான்கு படகுகளில் ப்ளூ பெல், மங்கையர்க்கரசி ஆகிய 2 படகுகளும் செயல் இழந்துவிட்ட நிலையில், தற்போது 27 குதிரை திறன் கொண்ட ஜலரத்னா, கண்ணகி ஆகிய இரண்டு படகுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2014ம் ஆண்டு தமிழக பொதுப்பணித்துறையினர் பராமரிப்பு கண்காணிப்பு பணிக்காக பயன்பாட்டுக்காக கொண்டுவரப்பட்ட 130 எச்.பி.திறன், இரண்டு டன் எடை வரை பொருட்களை எடுத்துச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட ஸ்டீல் போட்டான தமிழன்னை படகை பல்வேறு தொழில்நுட்ப காரணங்களை கூறி அதனை இயக்க விடாமல் கேரளா அரசு தடுத்து வந்தது.

இதனையடுத்து, கடந்த 12 ஆண்டுகளாக தமிழன்னை படகு இயக்கப்படாமல் தேக்கடி படகுத்துறையில் நிறுத்தப்பட்டது. ஆனால் கேரள அரசின் சுற்றுலாத்துறை, நீர் வளத்துறை மற்றும் காவல் துறை உள்ளிட்ட துறைகள் சார்பில் பெரியாறு அணையில் 19 படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தமிழன்னை படகை இயக்க விடாமல் கேரளா அரசு தடுத்து வந்ததை கண்டித்து தமிழகத்தில் உள்ள பல்வேறு விவசாய சங்கங்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தன.

தமிழ்நாடு அரசின் பல்வேறு முனைகளில் நடைபெற்ற முன்னெடுப்புகள் காரணமாக, கேரளா அரசின் ஒப்புதலோடு நேற்றுமுன்தினம் படகை பயன்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இதில், தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தமிழன்னை படகை பெரியாறு அணையில் இயக்கி ஆய்வு செய்தனர்.

இதில், அணை நீர் மட்டம், நில அதிர்வை கண்டறியும் சீஸ்மோகிராப், மழைமானி, காற்றின் வேகம் கண்டறியும் கருவி ஆகியவற்றின் இயக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மெயின் அணை, பேபி அணை, கேலரி பகுதி, ஷட்டர், மண் அணை ஆகியவற்றையும் பார்வையிட்டனர். தலைமைப் பொறியாளர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வில் பெரியாறு அணை சிறப்பு கோட்ட (கம்பம்) செயற்பொறியாளர் செல்வம், எஸ்.டி.ஓ. ராஜகோபால் உள்ளிட்ட பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு பல்வேறு முனைகளில் எடுத்துள்ள முன்னெடுப்பு காரணமாக கடந்த 2025 ஆகஸ்ட் மாதம் மேலும் ஒரு புதிய படகை அணையில் இயக்குவதற்கு கேரளா அரசு ஒப்புதல் அளித்திருந்தது. இந்நிலையில், புதிய படகிற்கும் தமிழக அரசு விரைவில் நிதி ஒதுக்கி அந்தப்படகும் அணையில் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.













## Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780







## WANTED

## JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

**பெண்கள் தேவை**

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

**9791061354 - 8072969599**


Head office

NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_

8939228901




## WANTED

Site Supervisor required for construction work in Ambattur



Contact:
8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெவ்ப்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

**7540003588**




## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872



## கவிதை அரங்கம்!



அவளை
ஏன் பிடித்திருக்கிறது
என்ற கேள்விக்கு
தெரிந்துகொள்வதில்
என்ன ஸ்வாரஸ்யமிருக்கப்
போகிறது
புதிராகவே இருந்துவிட்டுப்
போகட்டுமே
என் நேசம்

முத்தம்
பகிரவே வந்தேன்
முழுவதும்
பறித்துக்கொண்டாயே

நிலை நின்ற கண்களில்
செய்திகள் வந்தன
மௌனமாக நெஞ்சோடு
நீ யிருக்கிறாய் என்று

விருப்பமிகு காரணங்கள்
இல்லாமல் இல்லை
அவளை கண்டதும்
காதல் வர

## வாழ்க்கை தத்துவம்...



நீங்கள் அனுபவித்தால்
அது உங்கள் அறிவு
பிறரையும் அனுபவிக்கச்
செய்தால் அது
உங்கள் நற்பண்பு

ஒருவரை மன்னித்துவிடும்
அளவிற்கு நல்லவராக
இருங்கள் ஆனால் அவரை
மீண்டும் நம்புமளவிற்கு
முட்டாளாக இருக்காதீர்கள்

முகத்தை மூடினாலும்
மனதைத் திறந்து வை
நல்லெண்ணெம் நுழைவதற்கு

அழைப்பு வரும் வரை
உழைப்பு அவசியம்

## அடாவடிக் குமார்...

அது ஒரு தனியார் பைனான்ஸ் கம்பெனி கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு மேலாக குமார் அங்கே எல்லா வேலைகளையும் பார்த்துக் கொள்வான்... பார்த்துக் கொள்வான் என்று சொன்னால் கிட்டத்தட்ட அந்த கம்பனியே அவனுடையது என்பதை போலவே நடந்து கொள்வான். கேசியர் முதல் மேனேஜர் உள்ளிட்ட பனிரெண்டு நபர்கள் அந்த கம்பெனியில் நிரந்தர வேலையாட்கள்... அந்த பைனான்ஸ் கம்பெனியின் முதலாளி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக இந்த உலகையே சுற்றி வருவார்... யார் வீட்டு பணம் என்றெல்லாம் பார்க்கவே மாட்டார் பணத்தை தண்ணீராய் செலவு செய்வதில் அவரொரு அவதானி.

கம்பெனி என்னவோ பைனான்ஸ் கம்பெனி தான் ஆனால் கம்பெனியில் வேலை பார்க்கிற கேசியர் முதற்க்கொண்டு மேனேஜர்வரை அவர்களுக்கு பைனான்ஸ் கொடுப்பது குமாரின் வேலை. அந்த கம்பெனியை பொருத்தவரை குமார் என்னவோ ஒரு பியூன்தான் ஆனால் தன்னை பியூன் என்பதையே மறந்து சில சமயங்களில் நடந்து கொள்வான் குமார். காரணம் கம்பெனியில் வேலை செய்கிற அத்தனை பேரும் அவனுக்கு கடன்காரர்கள்.

கம்பெனி ஸ்டாப்புகளை முகத்துக்கு நேராக..., மிகவும் மரியாதையாக பேசுவான், அதே சமயம் அவர்களை விட்டு தூரமாக சென்றுவிட்டால் அவர்களைப் பற்றி ஏடாகூடமாகவும் இல்லாததையும் பொல்லாததையுமாக சொல்லி வைப்பான்... பணம் காசு ஏராளமாக அவன் கையில் புழங்குவதால் பிறரை பற்றி அவதூறு பேசுகிற குணம் அதிகமாக இருந்தது. தன்வினை தன்னைச்சுடும் என்கிற வார்த்தையை எப்போதும் தனக்கானது என்று அவன் நினைக்கவே மாட்டான் அப்படியொரு புல்லுருவித்தனம் நிறைந்தவன்.

பைனான்ஸ் வாங்குவதற்கோ கொடுப்பதற்கோ, அந்த கம்பெனிக்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் அனைவரும் முதலில் குமாரைத்தான் சந்தித்தாக வேண்டும்... அதனாலேயே என்னவோ அவன் அந்த கம்பெனிக்கு முதலாளி என்பதைப் போலவே பேச்சு நடத்தை அத்தனையும் இருக்கும். அவனுடைய சப்போர்ட் இல்லாமல் அங்கு யாரும் பைனான்ஸ் வாங்கி விட முடியாது அப்படி பைனான்ஸ் வாங்குபவர்கள் இத்தனை சதம் கழிவு என்று அவனுக்கு ஊட்டுத்தொகையாக கொடுத்தாக வேண்டும். இதனாலேயே குமாரைப்பற்றி தெரிந்த பல பெண்கள் அந்த கம்பெனிக்கு பைனான்ஸ் பெறுவதற்கு வருவதே கிடையாது.

அந்த கம்பெனியின் மேனேஜர் செல்வம் எத்தனையோ முறை பல மாதிரி குமாருக்கு அறிவுரை வழங்கி விட்டார் ஆனாலும் அவன் அதையெல்லாம் மதிப்பதாகயில்லை ஏனென்றால் ஒரு சமயத்தில் செல்வமே குமாரிடம் பத்து லட்சம் வரை கடன் வாங்கி இருந்தார் அதற்காக வட்டியாக மட்டுமே ஒவ்வொரு மாதமும் தனது சம்பளத்திலிருந்து சிறு தொகையை குமாருக்கு வட்டியாக செலுத்தி வந்தார். அதனாலையோ என்னவோ குமாரிடம் அதிர்ந்து பேச சற்றே சங்கடப்படுவார் செல்வம். இந்த நிலை செல்வத்திற்கு மட்டுமல்ல, அங்கு வேலை பார்க்கிற எல்லா ஸ்டாப்புகளுக்கும்தான்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதில் குமார் மிகவும் கில்லாடி அவன் என்ன பேசுகிறான் என்பதை எதிரில் இருந்து புரிந்து கொள்வதே சிரமமாய் இருக்கும் அப்படி ஒரு சூசகத்தனமான பேச்சு அவனிடம் இருக்கும். அந்த கம்பெனியிலேயே பல வருடங்களாக கூட்டி துடைக்கிற வேலையை செய்து கொண்டிருந்தாள் வள்ளி. அந்த கம்பெனி கண்ணாடி போல் மிளிர்கிறது என்று சொன்னால் அது வள்ளியின் கைவண்ணம் தான். வள்ளியின் குடும்பம் மிகவும் பெரியது அதனாலேயே வள்ளி அத்தனை பேரும் கம்பெனியை விட்டு போன பிறகும் கூட அந்த கம்பனியை கூட்டி துடைத்து சுத்தம் செய்துவைத்து விட்டுத்தான் வீட்டிற்கு கிளம்புவாள். ஏனென்றால் அவளுக்கு கிடைக்கிற இரண்டு மணிநேர ஓட்டி தான் காரணம்.

அவளுக்கும் எப்போதாவது மிகப் பெரிய பண தேவைகள் ஏற்படுவதுண்டு அந்த சமயங்களில் குமாரை தான் அண்ணா அண்ணா...என்று கெஞ்சி கொண்டு நிற்பாள். குமாரோ கொஞ்சமும் மனசாட்சி இல்லாமல் பத்துபைசா வட்டி என்று சொல்லிக் கொடுப்பான். அவளோ வேறு வழி இல்லாமல் அதை வாங்கி கொள்வாள். வள்ளி அவனிடம் வாங்கிய கடன் அடைகிறவரை பாதிசம்பளம்கூட வீட்டுக்கு போகாது என்பது மிகவும் சங்கடத்திற்குரிய செய்தி. வள்ளியால் ஏதாவது ஒரு மாதத்தில் வட்டியை கொடுக்க இயலாமல் போகும் பட்சத்தில் ஏதோ வள்ளியையே அவனுக்கு ரியவ ள் என்பதைப்போல பார்ப்பான் குமார்... அந்த சமயங்களில் வள்ளி அவமானத்தால் கூனிக்குறுகி போவாள்...குமார் அவளை அடைவதற்கு போடுகின்ற சின்ன சின்ன திட்டங்களையெல்லாம் உடைத்தெறிந்து அவனிடம் அகப்படாமல் நழுவி விடுவார்கள்.

அன்று கம்பெனி வேலைக்காக அத்தனை பேரும் வந்து விட்டார்கள் ஆனால் குமார் மட்டும் இன்னும் வரவில்லை... ஏன் என்னாயிற்று...? என்று மேனேஜர் செல்வம் தான் குமாருக்கு போன் செய்து கேட்டார். குமாரின் மகன் தினேஷ்... கல்லூரிக்கு செல்லுகிற பாதையில் ஏதோ விபத்து நடந்து விட்டதாகவும் தன்னுடைய மகனுக்கு மிகவும் அடிபட்டு இருப்பதால் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இருப்பதாகவும் தனது மகன் தினேஷ் மிகவும் சீரியஸாக இருப்பதாகவும், கூறினார் குமார். குமாரிடம் பட்டகடனோ, தொட்ட கடனோ தெரியாது. எல்லோரும் அந்த தனியார் மருத்துவமனையை நோக்கி சென்றார்கள். போன பிறகு தான் தெரிந்தது குமாரின் மகன் தினேஷுக்கு மிகவும் பலத்த காயம் தலையில் ஏற்பட்டு இருந்தது உடனடியாக அவனுக்கு தேவையான ரத்தத்தை செலுத்த வேண்டுமென்று மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். அங்கே தினேஷுக்கு உரிய ரத்தம் கிடைப்பதில் மிகவும் சிரமமாக இருந்தது பல மணி நேரம் முயற்சி செய்தும் எங்கும் கிடைக்கவில்லை என்ன செய்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிப்போனான் குமார்.

தனது குடும்பத்தில் இருக்கின்ற அத்தனை பேரையும் வரவழைத்து பரிசோதனை செய்து பார்த்து விட்டாயிற்று யாருடைய ரத்தமும் தினேஷுக்கு பொருந்தவில்லை மிகவும் கலக்கத்தோடு திரிந்தான் குமார். அந்த நேரத்தில் செய்தியை கேள்விப்பட்டு வள்ளி அந்த மருத்துவமனைக்கு வந்தாள். குமாரிடம் வந்து "அண்ணா தம்பிக்கு என்ன ஆயிற்று டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்" என்று மிகவும் கவலையோடு விசாரித்தாள். தனது மகனுக்கு தேவைப்படுகின்ற ரத்த வகையைப் பற்றி வள்ளியிடம் கவலையாக தெரிவித்தான். "அண்ணா நீங்கள் எந்த கவலையும் பட வேண்டாம் தினேஷுக்கு தேவையான ரத்தம் கிடைத்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள் என்று குமாருக்கு ஆறுதல் சொல்லிய வள்ளி திடீரென மருத்துவர்கள் அறைக்குள் நுழைந்தாள்.

வள்ளியின் ரத்த வகையும் தினேஷின் ரத்த வகையும் ஒன்றாய் இருந்தது கண்டு குமார் மிகவும் ஆச்சரியப்பட்டான் தினேஷ்க்கு தேவையான ரத்தத்தை வல்லியிடமிருந்து பெற்றுக் கொண்டனர் அதே சமயம் ஒரு உயிரை காப்பாற்ற தன்னால் முடிந்ததே என்கிற பெருமிதத்தோடு வெளியே வந்தாள்வள்ளி.

எந்தவித பிரதிபலமும் பாராமல் தன் மகனின் உயிரை காப்பாற்றிய வள்ளியிடம்,முன்பு வட்டிக்காகவும், உடல் சுகத்துக்காகவும், எப்படியெல்லாம் கடுமையாகவும் குரூர புத்தியுடனும், பல நேரங்களில் வள்ளியை பற்றி ஆகாததையும் பொல்லாததையும் பேசி அவமானப்படுத்தியதையும், எப்படி எல்லாம் பிறருடைய மனம் நோகும்படி புறம் பேசித் திரிந்தோம் என்பதை எண்ணி எண்ணி... தனது சக பணியாளர்களிடம் எப்படியெல்லாம் தவறாக நடந்து கொண்டோம் என்று நினைத்து, நினைத்து வெட்கத்தில் கூனி குருகிப்போய் நின்றிருந்தான் வட்டிக்கார அடாவடி குமார்.

**முத்தையா மோகன்**
கோயம்புத்தூர்



## தினம் ஒரு சமையல்

### ரவா கேசரி மோதகம்

தேவையான பொருட்கள்:

வெள்ளை ரவை -1 கப்
சர்க்கரை -1/2 கப்
பால் -2 கப்
ஏலக்காய் தூள் -1 டீஸ்பூன்
நெய் -1/2 கப் ஸ்பூன்
கேசரி கலர் பவுடர் -ஒரு சிட்டிகை

செய்முறை:



ஒரு கடாயை எடுத்து ஸ்டவ்வில் வைத்து சூடானதும் நெய் ஊற்றி காய்ந்ததும், ரவையை சேர்த்து நன்கு வறுக்கவும்.

வேறு ஒரு நான்ஸ்டிக் பாத்திரத்தை ஸ்டவ்வில் வைத்து சூடானதும் அதில் இரண்டு கப் பால் சேர்த்து கொதிக்க விடவும். வறுத்த ரவையை சேர்த்து கலந்து விடவும்.

அத்துடன் சர்க்கரை,கேசரி கலர் பவுடர் சேர்த்து நன்கு கலந்து விடவும். ஐந்து நிமிடங்கள் மிதமான சூட்டில் வைத்து வேக வைக்கவும்.

கொஞ்சம் நெய் சேர்த்து கலந்து இரண்டு நிமிடங்கள் மூடி வைக்கவும். பின்னர் நன்கு கலந்து ஏலக்காய் தூள் சேர்த்து கலந்து இறக்கினால் மோதகம் செய்ய கேசரி தயார்.

பின்னர் பொடித்த நட்ஸ் முந்திரி, திராட்சை, பாதாம் எல்லாம் நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளவும்.

தயாரான கேசரி சூடு ஆறியதும் கெட்டியாகிவிடும். பின்னர் எடுத்து உருட்டி நடுவில் வறுத்து வைத்துள்ள நட்ஸ்ஐ வைத்து உருட்டி, மோதகம் அச்சில் வைத்து அழுத்தி எடுத்தால் ரவா கேசரி மோதகம் தயார்.

மிகவும் அருமையான சுவையில் விநாயகருக்கு உகந்த ரவா கேசரி மோதகம் தயார்.

தயாரான மோதகத்தை எடுத்து ஒரு தட்டில் வைத்து விநாயகருக்கு படைக்கவும்.

ரவா கேசரி செய்வது போல் செய்து,நடுவில் நட்ஸ் வைத்து பிடித்த இந்த ரவா கேசரி மோதகம் மிகவும் சுவையாக இருக்கும்.

## வல்லாரை பயன்கள்



வல்லாரை கீரையின் அற்புத மருத்துவ பயன்கள் !!

வல்லாரை கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, உயிர்ச் சத்துகள் மற்றும் தாது உப்புக்கள் அதிகமாக உள்ளன. ரத்தத்திற்கு தேவையான சத்துக்களை, சரியான அளவில் இந்த கீரை கொண்டுள்ளது.

வல்லாரை கீரையானது இரத்தத்தை சுத்திகரிக்கிறது, ஞாபகசக்தியை அதிகரிக்கிறது. வல்லாரை கீரை உடலில் ஏற்பட்ட புண்களை ஆற்றும்.

வல்லாரை கீரை தொண்டைக்கட்டு, காய்ச்சல், சளி குறைய உதவுகிறது, உடற்சோர்வு, பல் சம்பந்தமான நோய்கள் மற்றும் சொறி, சிரங்கு, படை போன்ற தோல் நோய்களை குணமாக்கும்.

வல்லாரை கீரையை கொண்டு பல்துலக்கினால், பற்களில் படிந்துள்ள மஞ்சள் தன்மை நீங்கும். வல்லாரை கீரை நரம்பு தளர்ச்சியை குணமாக்கி, மூளைச் சோர்வை நீக்கி மூளையின் சிந்திக்கும் திறனை அதிகரிக்கும்.

அஜீரணக் கோளாறுகளை சரி செய்யும், மங்களான பார்வையை சரி செய்யும். பால்வினை நோய்கள், வெண்குஷ்டம் போன்ற நோய்களுக்கு வல்லாரை சிறந்த மருந்தாகும்.

பிரசவத்திற்கு பின் தாயின் உடல்நிலை தேறுவதற்கு வல்லாரை இலைகளை இடித்து சாறெடுத்து, பனங்கற்கண்டோடு சேர்த்து கொடுக்கலாம்.

வல்லாரை இலையை வாயில் போட்டு மென்று விழுங்கினால் குடல் புண், குடல் நோய், வாய்ப்புண், வாய் நாற்றம் ஆகியவை நீங்கும்.

வல்லாரை கீரை பொதுவாக இருதய பலத்துக்கும், தாது விருத்திக்கும் உதவுகின்றது. வல்லாரை, ரத்த சோகையைப் போக்கி ரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

வல்லாரை இலையை உலர்த்தி நன்குப் பொடித்து, பாலில் கலந்து தினமும் இரவு படுக்கைக்குச் செல்லும் முன் குடித்தால் வயிற்றில் உள்ள பூச்சிகள் அழிந்துபோகும்.



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*ஒரு கல்யாணத்துல மொய் வைக்க வந்த எல்லாருக்கும் கையில BREAD கொடுத்தாங்கலாம் ஏன்..?*

*விடை: ஏன்னா அந்த கல்யாணம் நல்லா JAM JAM-னு நடந்துச்சாம்.*



## லோகேஷ் கனகராஜ் பிறந்தநாள் ஸ்பெஷல், இதுவரை அவர் இயக்கிய படங்களின் பாக்ஸ் ஆபிஸ் விவரம் இதோ...



தமிழ் சினிமாவில் கடந்த 2017ம் ஆண்டு மாநகரம் என்ற படம் வெளியாகி இருந்தது, அந்த தரமான படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் தான் லோகேஷ் கனகராஜ்.

படத்தின் கதை, மேக்கிங், இயக்கம் என பல விஷயங்கள் மக்களை கவர்ந்தது. முதல் படத்தின் மூலமாகவே மக்களின் கவனத்தை பெற்றவர் அடுத்த படத்தின் கதையையும் திறமையாக எழுதி சாதித்தார்.

ஒரே இரவில் நடக்கும் கதைக்களம், இந்த மாதிரி கதை வருமா என்று தான் ரசிகர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

முதல் இரண்டு படத்திலும் கவனம் பெற்ற லோகேஷ் கனகராஜ், விஜய்யை வைத்து மாஸ்டர், லியோ, கமல்ஹாசனை வைத்து விக்ரம், ரஜினியை வைத்து கூலி என தொடர்ந்து படங்கள் இயக்கி ரசிகர்களின் கவனத்தை பெற்று வந்தார்.

ரஜினியின் கூலி படத்திற்கு பிறகு தெலுங்கு சினிமாவின் டாப் நடிகர் அல்லு அர்ஜுனை வைத்து அடுத்த படம் எடுக்க உள்ளார்.

இன்று தனது 40வது பிறந்தநாளை கொண்டாடும் லோகேஷ் கனகராஜ் இதுவரை இயக்கிய படங்களின் பாக்ஸ் ஆபிஸ் கலெக்ஷன் விவரத்தை காண்போம்.

மாநகரம்- ரூ. 10+ கோடி
கைதி- ரூ. 100+ கோடி
மாஸ்டர்- ரூ. 225+ கோடி
விக்ரம்- ரூ. 430+ கோடி
லியோ- ரூ. 590+ கோடி
கூலி- ரூ. 520+ கோடி



விஷ்ணு பிரியா தாராள கவர்ச்சி லுக்கில் ஹாட் போட்டோஷூட் நடத்தி இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

அவரது ரசிகர்கள் மத்தியில் இந்த ஸ்டில்கள் வைரல் ஆகி வருகிறது.

சினிமா

## 16 நாட்களில் உலகளவில் தாய் கிழவி படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



கடந்த மாதம் வெளிவந்த தாய் கிழவி படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது. ராதிகா சரத்குமார் நடிப்பில் உருவான இப்படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியிருந்தார்.

மேலும், நடிகர் சிவகார்த்திகேயன் இப்படத்தை தயாரிக்க, நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்திருந்தார். நல்ல எதிர்பார்ப்புடன் வெளிவந்த தாய் கிழவி படம் ரசிகர்களை முழுமையாக திருப்திப்படுத்தியது.

இதன் காரணமாக முதல் நாளில் இருந்தே வசூலில் பட்டையை கிளப்பி வந்தது.

இந்நிலையில், 16 நாட்களை வெற்றிகரமாக பாக்ஸ் ஆபிஸில் கடந்திருக்கும் தாய் கிழவி படம் உலகளவில் செய்துள்ள வசூல் பற்றி தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 16 நாட்களில் உலகளவில் இப்படம் ரூ. 64 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது.

இனி வரும் நாட்களிலும் இப்படத்தின் வசூல் வேட்டை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஸ்ரீ நம்மாழ்வார்...

ஸ்ரீ நம்மாழ்வார்
அவதரித்த இடம்
திருக்குறுங்குடி நம்பியிடம்
பிள்ளைவரம் பெற்ற
காரிமாறன், உடையநங்கை
தம்பதியருக்குத் திருமகனாய்
வைகாசித் திங்கள் ,விசாக
நட்சத்திரத்தில்,
திருக்குருகூரில் அவதரித்தார்!
ஆதிபிரானின் திருக்கோயிலில்,
ஆதிசேஷன் அம்சமாய்
தோன்றியிருந்த
திருப்புளியின் பொந்தினில்
பதினாறு ஆண்டுகள்
தவநிலையில் அமர்ந்திருந்தார்.

வைனதேயனின் அம்சமாய்
தோன்றியிருந்த மதுரகவியாரின்
குரலுக்கு செவிமடுத்து
கண்மலர்ந்து,
அவர் கேட்ட சூட்சம
வினாவிற்கு விடையளித்து
அவர் ப்ரார்தனைக்கிணங்க,
அவரைத்தம் சீடராய் ஏற்றார்
பூமிதொடும்போதே ‘சட’
என்னும் வாயுதனை தன்
காலால் எத்தி உதறி
“சடகோபன்” என பெயர்
பெற்றார்.
திவ்யதேசத்து
எம்பிரான்களை தம் யோக
நிலையிலிருந்தவாறே
கண்டுகளித்து, அவர்களை
பாசுரங்களால் பாடி
மகிழ்ந்திருந்தார்.
ஆழ்வார் பணித்த பாசுரங்கள்
அனைத்தினையும்
பட்டோலைப்படுத்தி அவற்றை
அவனியெங்கும் பரப்பினார்
மதுரகவியார்!

ரிக் வேத த்தின் சாரமாய்
நூறு பாசுரங்கள் கொண்ட
திருவிருத்தம்
யஜுர் வேத த்தின் சாரமாய்
ஏழு பாசுரங்கள் கொண்ட
திருவாசிரியம்
அதர்வண வேத த்தின் சாரமாய்
எண்பத்தியேழு பாசுரங்கள்
கொண்ட பெரியதிருவந்தாதி
சாம வேதத்தின் சாரமாய்
ஆயிரத்தி நூற்றிரண்டு
பாசுரங்கள் கொண்ட
திருவாய்மொழி
என்ற நான்கு தமிழ்
ப்ரபந்ங்களை நான்கு
வேதங்களுக்கொப்பாக
பணித்து
“வேதம் தமிழ் செய்த
மாறன்” என பெருமைப்பட
வழங்கப்பட்டார்!

“நம்ஆழ்வார்” என
அரங்கனால்
உகப்பாய் கூறப்பட்ட
ஆழ்வார்
பெருமாளின்
திருவடிநிலையாய்
இருந்து’ப்ரீசடாரியாய்’
நம்மனைவருக்கும் ஞானம்
அளித்து
நம் துயர் அறுக்கும் சுடரடியாய்
அருள்பாலிக்கிறார்!

அரங்கனின் ஆணைக்கிணங்க,
கம்பநாட்டாழ்வார் “சடகோபன்
அந்தாதி”
என்ற




நூலைப்பணித்துஆழ்வாரின்
பெருமையைப்பரக்கக்
கூறுகிறார்!

“நளிர்மதி சடையனும் நான்முக
கடவுளும்
தளிர்ஒளி இமையவர்
தலைவனும் முதலா
யாவகை உலகமும், யாவரும்
அகப்பட
நிலம்,நீர்,தீ,கால், இரு
விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிது உடன்
மயங்க
ஒரு பொருள் புறப்பாடு இன்றி,
முழுவதும்
அகப்பட கரந்து, ஓர் ஆல்
இலை சேர்ந்த எம்
பெருமா மாயனை அல்லது
ஒரு மா தெய்வம் மற்று
உடையமோ யாமே?” என்றும்

“நாரணன் முழு ஏழ்
உலகுக்கும் நாதன்
வேத மயன்
காரணம் கிரியைகள் கருமம்
இவை
முதல்வன் எந்தை
சீர் அணங்கு அமர ர் பறர்
பலரும் தொழுது
ஏத்த நின்று
வாரணத்தை மருப்பு
ஒசித்த
பிரான் மாதவனே” என்றும்

வேதம் உரைக்கும்
பரம்பொருள்
நாரணனே என்று
தம் பாசுரங்கள்
மூலம் ஸ்தாபிக்கிறார்
ஆழ்வார்

“கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாம ம்
திண்ணம் நாரணமே”

“நாவூர் நாடோறும்
வாடா மலர் கொண்டு
பாவூர் அவன் நாம ம்
வீடே பெறலாமே” என்று

அவனளித்த ஞானம் கொண்டு
அவனை பக்தி செய்து
அவன் சரணாரவிந்தங்களில்
ப்ரபத்தி செய்யுங்கோள்!!
பரம பதம் திண்ணம்!!
என்பதனை தம்
ப்ரபந்தங்களால் ஆழ்வார்
அறுதியிடுகிறார்!!

ஆழ்வார் ,தாமிரபரணி
ஆற்றுநீரை காய்ச்ச
அறிவுறுத்தி , மதுரகவியார்
மூலம்,.
தம் விக்ரக மூர்த்தியையும்
பவிஷ்யாசார்யார் யதிராசரின்
விக்ரகமூர்த்தியையும்
செய்வித்து, பின்னாளில் ,நாத
முனிகளாரிடம்,ஜகதாசார்யார்
யதிராசரின் விக்ரகத்தை
பிரசாதித்ததாய்
அறியப்படுகிறோம்.

திவ்யதேசத்து எம்பிரான்களை
அனுபவித்தவாறு,இப்பூவுலகில்
முப்பதியாறு அகவைகள்
வாழ்ந்திருந்து,
காளமேகப்பெருமாளை
வழித்துணைப் பெருமானாய்க்
கொண்டு,
வைகுண்ட ஏகாதசி நன்னாளில்
,அந்தமில்லா பேரின்பவீட்டை
அடைந்தார்!

தினம் ஒரு தலைவர்கள்

# எல்.கே.துளசிராம் வரலாறு

ராஷ்ட்ரபந்து துளசிராம் (14 சனவரி 1870 - 4 சனவரி 1952) சௌராட்டிர சமூகத்தில் லகுடுவா. குப்பைய்யர்-மீனாட்சி அம்மாள் தம்பதியருக்கு 14-01-1870இல் பிறந்தார். பள்ளிக் கல்வியை மதுரையில் முடித்து, கல்லூரிக் கல்வியை, சென்னை கிறித்துவக் கல்லூரியில் பயின்று 1883ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார். சௌராட்டிரர் சமுகத்தில் கே. வி. இராமாச்சாரிக்கு அடுத்தபடியாக துளசிராம் இரண்டாவது பட்டதாரி ஆவார். சட்டம் பயின்றவர். சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். ஆத்திகம், அரசியல், சட்டத்துறை, சமூகசேவை, தொழில், கல்வி ஆகிய பல்வேறு துறைகளில் புகழீட்டியவர். சௌராட்டிர சமுக மக்களுக்கு கல்வி மற்றும் அரசியலின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்களுக்குப் பயிற்சியளித்தவர்.

ஆற்றிய பொதுநலப் பணிகள்
அரசியல் இயக்கப் பணியில்
நீதிக்கட்சித் தலைவர் சர். பிட்டி. தியாகராயருக்குப் பக்கபலமாக இருந்து சென்னை மாகாண அரசியலில் பல சீர்திருத்தங்களை நிறைவேற்றினார். பின் 1924இல் காங்கிரஸ் கட்சியில் இணைந்து சத்தியமூர்த்தியின் தலைமையில் இந்திய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டார். 1928ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சைமன் கமிசனுக்கு எதிராக திரளான தொண்டர்களுடன் மதுரை, திருமலை நாயக்கர் அரண்மனை வரை ஊர்வலமாகச் சென்று, இந்திய மக்களின் எதிர்ப்பை, இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் அரசுக்கு எதிராக காட்ட, கருப்புக் கொடிகளுடன் ”இந்தியாவை விட்டு வெளியேறு” உரத்த ஒலி எழுப்பினர். 1926இல் அன்றைய சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராக மதுரை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928இல் ஆங்கிலேய அரசு விதித்த தடையை மீறி, பாரதியார் இயற்றிய பாடல்களை சட்டசபையில் பாடி இந்திய விடுதலை உணர்ச்சியை மக்கள் அறிய பரப்பினார். 1904ஆம் ஆண்டு முதல் 1940ஆம் ஆண்டு முடிய மதுரை நகராட்சியில் 36ஆண்டுகள் உறுப்பினராகவும், இரண்டு முறை மதுரை நகர் மன்றத் தலைவராகவும் பணியாற்றினார் (1921-1923 மற்றும் 1930).
கூட்டுறவு இயக்கப் பணியில்
சௌராட்டிர சமுக மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, 1918ஆம் ஆண்டில் மதுரை சௌராட்டிர கூட்டுறவு வங்கியை நிறுவியதன் மூலம் கூட்டுறவு இயக்கத்திற்கு முன்னோடியாக விளங்கினார்.
கல்விப் பணியில்
பத்திரப்பதிவு துறையின் சார் பதிவாளர் பதவியை துறந்து கல்விப்பணியில் தன்னை முழுமையாக அர்பபணித்தார். சௌராட்டிர மக்களின் கல்வி முன்னேற்றதிற்காக மதுரையில் 1904ஆம் ஆண்டில் சௌராட்டிர மேல்நிலைப்பள்ளி உருவாக்க அரும்பாடுபட்டவர். 1911ஆம் ஆண்டில் சௌராஷ்ட்ர உயர்நிலைப் பள்ளி கௌன்சில் எனும் தனி அமைப்பைத் தொடங்கினார். பள்ளியின் முதன்மை கல்கட்டடம் கட்டி முடிக்க (1917 முதல் 1929 (முடிய) 12 ஆண்டுகள் தனது முழு நேரத்தை செலவழித்தார். மேலும் அப்பள்ளியின் தலைவராகவும், செயலராகவும் 1898ஆம் ஆண்டு முதல் 1940ஆம் ஆண்டு முடிய 42ஆண்டுகால பதவிக் காலத்தில், பள்ளியின் முன்னேற்றத்தில் சிறப்பாகப் பங்காற்றினார். மதுரையில் தொழில் நுட்பப்பள்ளி (அரசு பாலிடெக்னிக்) துவங்க காரணமாக இருந்தார். மதுரை தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து தமிழ்மொழி வளர்சிக்காக உழைத்தார். சேதுபதி தங்கபதக்கம் வென்றார். புதிய தமிழ் நூலகளைப் பதிப்பித்தார். துளசிராம், தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசுவதில் ஆற்றல் படைத்தவர்.
சமுதாயப் பணியில்
சட்டத்துறையிலும் சிறந்து பணியாற்றினார். தனது சட்ட நுட்பத்தின் வாயிலாக சமுதாய மக்களின் குறைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று சமுதாய நலன்களை காத்தார். 1919ஆம் ஆண்டில் இலண்டன் சென்று இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி சௌராஷ்ட்ர சமுகத்திற்கு பிற்பட்ட வகுப்பிற்கான தகுதி மற்றும் சலுகைகளை வாதாடிப் பெற்று, அதற்கான அரசாணை பெற்றுக் கொடுத்தார்.
சமுக மக்களின் முன்னேற்றதிற்காக மதுரையில் 1895ஆம் ஆண்டில் சௌராஷ்ட்ர சபையையும், 1906ஆம் ஆண்டில் சௌராஷ்ட்ர கிளப்பையும், 1918ஆம் ஆண்டில் சௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியையும், 1920ஆம் ஆண்டில் திராவிடர் பல்நோக்கு பொறியியல் நிறுவனத்தையும் (தற்போதைய மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக்), துவக்குவதற்கு முன்னோடியாக இருந்து செயல்பட்டார். 1897ஆம் ஆண்டில் நடந்த முதல் சௌராஷ்டிர சமுக மாநாட்டில் கலந்து கொண்டு சமுக வளர்ச்சி குறித்து கருத்துகளைப் பதிவு செய்தார். சௌராஷ்ட்ர மக்கள் செய்து வந்த சாயத் தொழிலில் 1985இல் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தினார். ஏழை கைத்தறி நெசவாளர்கள் பரம்பரையாகத் தெருக்களில் பாவு நீட்டும் உரிமையை அரசுடன் போராடி வாங்கித் தந்தார்.
மதுரை நகர வளர்ச்சிப் பணியில்
மதுரை நகராட்சியில் தலைமைப் பதவி வகித்த காலத்தில்தான் 1921ஆம் ஆண்டில் மதுரை நகரத் தெருக்களில் மின் விளக்குகள் அமைக்கப்பட்டது. 1923ஆம் ஆண்டில் மதுரை நகரில் கழிவுநீர் பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வரப்பட்டது.
பெற்ற விருதுகளும் சிறப்புகளும்
நாட்டு மக்களுக்காக ஆற்றிய பணியைப் பாராட்டும் விதமாக, இவருக்கு மதுரை மக்கள் சார்பாக 1930ஆம் ஆண்டில் இராஷ்ட்ர பந்து எனும் பட்டம் வழங்கப்பட்டது. மதுரை மாநகராட்சி, துளசிராமின் மக்கள் பணியை நினைவு கூறும்படியாக திருமலை நாயக்கர் அரண்மனை முன்பாக உள்ள மாநகராட்சி பூங்காவிற்கு எல். கே. துளசிராம் பூங்கா என்று பெயரிட்டு சிறப்புச் செய்தது. தழிழார்வம் கொண்ட நல்ல வைணவராக விளங்கிய இவருக்கு, இவர் உருவாக்கிய மதுரை சௌராட்டிர மேல்நிலைப் பள்ளி, மதுரையின் நூற்றாண்டு விழாவின் போது, இவருடைய முழு உருவ வெண்கலச்சிலை நிறுவப்பட்டுள்ளது. இவரது முயற்சியால் 1918ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மதுரை சௌராட்டிர கூட்டுறவு வங்கியில் இவரது மார்பளவு வெண்கல திருவுருவச் சிலை வங்கியில் அமைத்து, வங்கி நிர்வாகம் இவரது சமுதாயப் பணிக்கும், ஆளுமைக்கும் சிறப்புச் செய்தது. கே. வி. இராமாச்சாரி, எல். கே.துளசிராம் ஆகியவர்களின் சமுதாய பணியை நினைவு கூறுமுகமாக சௌராட்டிர மக்கள் இராமாச்சாரி, துளசிராம் என்று தங்கள் ஆண் குழந்தைகளுக்குப் பெயரிட்டனர்.



# போலியான அனுமதிச் சான்றிதழ்கள் வழங்கிய காவலா் கைது

புதுடெல்லி, மார்ச் 16:

டில்லி ஷாஹீன் பாக் காவல் நிலையத்தில் பணியாற்றிய காவலா் அருண் போதைப் பொருள் கடத்தலில் போலியான காவல் துறை அனுமதிச் சான்றிதழ்களை வழங்கியதாக கைது செய்யப்பட்டாா் என அதிகாரிகள் தெரிவித்தனா்.

பொதுவாக வெளிநாடுகளில் வேலைக்கு செல்ல, விசா விண்ணப்பம், குடியேற்ற நடைமுறை மற்றும் தனியாா் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்கு இந்த காவல் துறை அனுமதி சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இது தொடா்பாக காவல் துறையினா் மேலும் கூறியதாவது: தென்கிழக்கு தில்லியில் நடைபெற்ற போதைப் பொருள் கடத்தல் விசாரணையின்போது இந்த மோசடி வெளிவந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட அருண் 2017-ஆம் ஆண்டு தில்லி காவல்துறையில் பணியில் சோ்ந்தாா். ஹிமாசல பிரதேசம் மண்டி பகுதியைச் சோ்ந்த இவா் துஷாா் என்ற தனது கூட்டாளியுடன் இணைந்து குற்றச் செயல்களில் ஈடுபடுபவா்களுக்கு போலி காவல் துறையின் அனுமதிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளாா். இதற்காக ரூ.1000 முதல் ரூ.2000 வரை வசூலித்துள்ளாா். அவரும் அவரது கூட்டாளியும் 6 மாதங்களாக மாதம் ரூ.35,000 வாடகை வீட்டில் தங்கி இருந்தது தெரியவந்தது. அந்த வீட்டில் நடைபெற்ற சோதனையில் பல போலி சான்றிதழ்கள், அதிகாரப்பூா்வ முத்திரைகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

# சிஇ20 கிரையோஜெனிக் எஞ்சின் சோதனை வெற்றி – இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை



புதுடெல்லி, மார்ச் 16:

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) பி.எஸ்.எல்.வி., ஜி.எஸ்.எல்.வி. மற்றும் எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளை தயாரித்து அவற்றில் செயற்கைக்கோள்களை பொருத்தி வெற்றிகரமாக விண்ணில் ஏவி வருகிறது. மேலும் அதிக எடை கொண்ட விண்கலங்களை விண்ணில் ஏவுவதற்கும், மனிதர்களை விண்ணுக்கு அழைத்து சென்று மீண்டும் பூமிக்கு அழைத்து வருவதற்கும் அதிக எடை கொண்ட எல்.வி.எம்.3 ராக்கெட்டுகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களும் விண்ணில் ஏவப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரோ விஞ்ஞானிகள் தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் எல்.வி.எம்.3 ராக்கெட்டுக்கான சக்திவாய்ந்த சிஇ20 கிரையோஜெனிக் எஞ்சினின் உயர் சக்தி சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளது. 165 வினாடிகள் நீடித்த இந்த சோதனை கடுமையான வெப்பத்தைத் தாங்கும் என்பதை நிரூபித்துள்ளது. எதிர்கால விண்வெளி பயணத்திற்கு இந்தியாவின் கனரக தூக்கும் திறன்கள் மிகவும் நம்பகமானதாக மாறி வருவதை இந்த சோதனை நிரூபிக்கிறது.

இந்த எந்திரம் 22 டன் உந்துவிசை அளவை எட்டியது. இது ஈர்ப்பு விசைக்கு எதிராக ஒரு ராக்கெட்டை மேல்நோக்கி தள்ள தேவையான சக்தியாகும். இந்த வெற்றி இந்தியாவின் கனமான ராக்கெட்டான எல்.வி.எம்-3-ன் எதிர்காலத்திற்கான ஒரு முக்கியமான படியைக் குறிக்கிறது. இந்த வெற்றி இந்திய விண்வெளி வீரர்களை, விண்வெளிக்கு அழைத்துச் செல்லும் ககன்யான் திட்ட பயணத்திற்கு நேரடியாக உதவுகிறது.

# லடாக் சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் 6 மாதத்துக்கு பிறகு விடுதலையாகிறார்

புதுடெல்லி, மார்ச் 16:

லடாக்கில் மாநில அந்தஸ்து கோரி சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் உண்ணாவிரதம் தொடங்கினார். அப்போது ஏற்பட்ட கலவரத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து அவர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். இதை எதிர்த்து வாங்சுக் மனைவி கீதாஞ்சலி ஆங்மோ, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த மனு மீதான விசாரணையை உச்ச நீதிமன்றம் 17-ம் தேதிக்கு தள்ளிவைத்தது. மேலும் அவரது உடல்நிலையை கருத்தில் கொண்டு தடுப்புக் காவலை மறுபரிசீலனை செய்ய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கேட்டிருந்தது. இதையடுத்து, சோனம் வாங்சுக்கின் தடுப்புக் காவலை ரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளது என்று மத்திய உள்துறை நேற்று வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 6 மாத சிறைவாசத்துக்கு பிறகு சோனம் வாங்சுக் விடுதலையாக உள்ளார்.

# 100 தெருநாய்கள் விஷம் வைத்து கொலை : தெலுங்கானாவில் அதிர்ச்சி

ஐதராபாத், மார்ச் 16:

தெலுங்கானா மாநிலம் மஞ்சேரியல் மாவட்டத்தில் உள்ள கிஷ்தாபூர் கிராமத்தில், சுமார் 100 தெருநாய்கள் விஷம் வைத்து கொலை செய்யப்பட்டதாக காவல்துறையினரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விலங்குகள் நல ஆர்வலர் கவுதம் என்பவர் கூறுகையில், இந்த 100 தெருநாய்களும் மார்ச் 7 மற்றும் 8-ந்தேதிகளில் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். குறிப்பாக கிராம பஞ்சாயத்து தலைவர், துணை தலைவர் ஆகியோர், நாய்களை கொலை செய்வதற்காக 2 நபர்களுக்கு பணத்தை கொடுத்ததாகவும், நாய்களுக்கு விஷ ஊசி செலுத்தி கொலை செய்துவிட்டு, அவற்றை ஆற்றங்கரை ஓரமாக புதைத்துவிட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கிராம பஞ்சாயத்து தேர்தலின்போது, தெருநாய்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக சம்பந்தப்பட்ட நபர்கள் வாக்குறுதி அளித்ததாகவும் புகாரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் மட்டும் தெலுங்கானாவில் சுமார் 1,300 தெருநாய்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# டில்லி உயிரியல் பூங்காவில் நீலமான், குள்ளநரி உயிரிழப்பு

புதுடெல்லி, மார்ச் 16:

டில்லி தேசிய உயிரியல் பூங்காவில் மார்ச் 10 மற்றும் மார்ச் 12-ஆகிய தேதிகளில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இதுகுறித்து பூங்கா இயக்குநா் சஞ்சீத் குமாா் கூறுகையில், இந்த இரு விலங்குகளும் வயது மூப்பு காரணமாக உயிரிழந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இவை முன்பே மருத்துவ கண்காணிப்பில் இருந்தது வந்தது. வயது காரணமான உடல்நலக் குறைபாடுகள் காரணமாக உயிரிழந்துள்ளது என தெரிவித்தாா்.

கடந்த மூன்று மாதங்களாக தில்லி உயிரியல் பூங்காவில் பல விலங்குகள் உயிரிழந்துள்ளன. அதில் ஒரு பெண் மான், ஒரு குள்ளநரி மற்றும் ஒரு சங்காய் மான் ஆகியவை அடங்கும்.

இதற்கு முன், இந்த மாதத்தின் தொடக்கத்தில் ஒரு ஆண் சங்காய் மான் உயிரிழந்தது. இந்த அரிய இன மான் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 சட்டத்தின் அட்டவணை 1-இல் இடம்பெற்றுள்ள பாதுகாக்கப்படும் இனமாகும். அந்த மானின் பின்புற காலில் பிளாஸ்டா் வைக்கப்பட்டிருந்ததால், தொடா்ந்து மருத்துவ கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனா்.

இதேபோல், 2025 டிசம்பா் 14-ஆம் தேதி பூங்கா வளாகத்தில் ஒரு குள்ளநரி காணாமல் போனதால் அதை பிடிக்க அதிகாரிகள் உத்தரவிட்டனா். பின்னா் அந்த விலங்கு மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்ததாக கூறப்பட்டது.

ஆனால் பூங்கா ஊழியா் சங்கம், டிசம்பா் 18-ஆம் தேதி துா்நாற்றம் வீசியதைத் தொடா்ந்து அந்த குள்ளநரி இறந்த நிலையில், ஒரு பகுதி எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணையில், கரடி கூண்டுக்குள் குள்ளநரி உயிரிழந்ததாக எந்த ஆதாரமும் இல்லை என்று கூறப்பட்டது. இருந்தாலும், மருத்துவ பரிசோதனை செய்யாமல் அந்த விலங்கின் உடல் அகற்றப்பட்டதாக ஊழியா் சங்கம் தொடா்ந்து குற்றஞ்சாட்டியது.

# விநியோகத்தில் சிக்கல் நீடித்தாலும் சமையல் காஸ் தட்டுப்பாடு இல்லை: மத்திய அரசு விளக்கம்



புதுடெல்லி, மார்ச் 16:

இந்தியா உலகின் 2-வது பெரிய சமையல் காஸ் (எல்பிஜி) நுகர்வு செய்யும் நாடாகும். இதில் 90 சதவீத எரிவாயு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் போர்ப் பதற்றம் காரணமாக, இந்த கடல் வழிப் பாதையில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

மேற்கு ஆசியப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், எல்பிஜி சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என மக்கள் மத்தியில் ஒருவித தேவையற்ற அச்சம் நிலவுகிறது. இதனால் வழக்கத்தைவிட கூடுதலாக 88 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதனால் சமையல் காஸ் விநியோகம் கவலைக்குரிய ஒரு விஷயமாக உள்ளது. இருப்பினும், எந்த விநியோக மையத்திலும் இருப்பு தீர்ந்து விடவில்லை. எனவே, தேவைப்படும் போது மட்டும் பொது மக்கள் சிலிண்டர்களை முன்பதிவு செய்ய வேண்டும்.

எண்ணெய் நிறுவனங்களிடம் கச்சா எண்ணெய் இருப்பு போதுமான அளவில் உள்ளது. இதனால் பெட்ரோல், டீசலுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது.

வர்த்தக சிலிண்டர் விநியோகம் குறித்த முடிவுகள் அந்தந்த மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து எடுக்கப்படும். சிலிண்டர்களைக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதைத் தடுக்கத் தொடர்ச்சியாக சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மார்ச் 13-ம் தேதி மட்டும் எண்ணெய் நிறுவன அதிகாரிகள் 1,300-க்கும் மேற்பட்ட இடங்களில் திடீர் சோதனைகளை நடத்தினர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மேற்காசிய மோதலில் சிக்கி 5 இந்தியர்கள் பலி; ஒருவர் மாயம்: மத்திய அரசு

புதுடெல்லி, மார்ச் 16:

ஈரான் மீது நடந்த தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது.

இதனால், கப்பல்களில் பணியாற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஊழியர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்து வருகின்றன. இந்நிலையில், வளைகுடா பகுதிக்கான கூடுதல் செயலாளர் அசீம் மகாஜன் இன்று கூறும்போது, மேற்காசிய மோதலில் சிக்கி 5 இந்தியர்கள் பலியாகி உள்ளனர். ஒருவரை காணவில்லை என கூறினார். ஓமன், ஈராக் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள தூதரகங்களுடன் நாம் தொடர்ந்து தொடர்பில் உள்ளோம். காணாமல் போன இந்தியரை பற்றியும் மற்றும் உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை சொந்த நாட்டுக்கு திருப்பி கொண்டு வரவும், தேவையான முறையான நடவடிக்கைகளை முடிப்பதற்காக அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசி வருகிறோம் என்றார். இந்த பகுதியிலுள்ள கப்பல் பணியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன என அவர் கூறியுள்ளார்.

# இந்தியாவுக்குள் நுழைந்த பாக். ட்ரோன்: பாதுகாப்புப் படையினா் தேடுதல் வேட்டை

புதுடெல்லி, மார்ச் 16:

ஜம்மு-காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில், பாகிஸ்தான் பகுதியில் இருந்து சா்வதேச எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்த ட்ரோனை தேடும் பணியில் பாதுகாப்புப் படையினா் ஈடுபட்டுள்ளனா்.

சம்பா மாவட்டத்தின் ராம்கா் பகுதியில் உள்ள கந்திரால், அப்தால், பகதூா்பூா் ஆகிய கிராமங்களுக்கு மேலாக கடந்த வெள்ளிக்கிழமை இரவில் தென்பட்ட இந்த ட்ரோன், பின்னா் மாயமாகிவிட்டது. அதைக் கண்டுபிடிக்க பாதுகாப்புப் படையினா் விரிவான தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனா். பாகிஸ்தானில் இருந்து இந்தியப் பகுதிக்குள் ட்ரோன் மூலம் ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள்கள் கடத்தப்படுவது அவ்வப்போது நிகழ்கிறது. இதுபோன்ற ட்ரோன்களை சுட்டு வீழ்த்தும் பாதுகாப்புப்படையினா், போதைப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களைக் கைப்பற்றுகின்றனா்.

ஆா்.எஸ்.புரா பகுதியில் உள்ள எல்லையோர கிராமங்களில் கடந்த 2 நாள்களில் ட்ரோன் மூலம் வீசப்பட்ட 3.5 கிலோவுக்கும் அதிகமான ஹெராயின் போதைப் பொருளை பாதுகாப்புப் படையினா் கைப்பற்றினா். இதன் சா்வதேச மதிப்பு ரூ.20 கோடிக்கும் அதிகமாகும். இந்தப் போதைப் பொருள் கடத்தல் தொடா்பாக ஆா்.எஸ்.புரா பகுதியில் இருவா் கைது செய்யப்பட்டனா்.

# சுயநலத்துக்காக இந்திய விவசாயத்தை அழிக்க தயாராகிவிட்டது மத்திய அரசு: ராகுல் காந்தி குற்றச்சாட்டு



புதுடெல்லி, மார்ச் 16:

மத்திய அரசு தனது சுயநலத்துக்காக இந்திய விவசாயத்தை பலி கொடுக்கத் தயாராகிவிட்டது என்று மக்களவை எதிா்க்கட்சித் தலைவா் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளாா்.

இது தொடா்பாக தனது 'ஃபேஸ்புக்' பக்கத்தில் அவா் சனிக்கிழமை வெளியிட்ட பதிவில், நாடாளுமன்றத்தில் தான் எழுப்பிய கேள்வியைப் பகிா்ந்துள்ளாா். அதில், 'அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்படவுள்ள வா்த்தக ஒப்பந்தத்தால், இந்தியாவில் விவசாயிகளுக்கு வழங்குவதாக மத்திய அரசு உறுதியளித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலை பாதிக்கப்பட வாய்ப்புள்ளதா' என்றும், உற்பத்திச் செலவுடன் 50 சதவீதம் கூடுதலாக சோ்த்து குறைந்தபட்ச ஆதரவு விலையை நிா்ணயிப்பதாக கடந்த 2021-ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி இப்போதுவரை நிறைவேற்றப்படாதது ஏன்? என்றும் நான் கேள்வி எழுப்பியிருந்தேன். ஆனால், மத்திய அரசு இந்தக் கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலளிக்காமல், இப்போது உள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையையே மீண்டும் கூறியது.

மேலும், மாநில அரசுகள் அளித்து வந்த கூடுதல் ஊக்கத் தொகையை நிறுத்த வலியுறுத்தியதையும் மத்திய அரசு ஒப்புக்கொண்டது. எவ்வித நியாயமும் இன்றி, இது தேசிய நலனுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை ன்று கூறி தங்கள் தவறை நியாயப்படுத்தவும் மத்திய அரசு முயன்றது.

மேலும், அமெரிக்காவுடனான வா்த்தக ஒப்பந்தத்தில் வா்த்தகமல்லாத தடைகளைக் குறைப்பது தொடா்பாக விவாதிக்கப்படுவது தொடா்பாகவும் முக்கிய கேள்விகளை எழுப்பினேன். ஏனெனில், இது குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களை அரசு கொள்முதல் செய்வதை நேரடியாகப் பாதிக்கக்கூடிய செயலாகும். இந்தக் கேள்விக்கும் மத்திய அரசு தெளிவான பதில் அளிக்காமல் தவிா்த்து வருகிறது. பிரதமா் மோடி தலைமையிலான அரசு விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை மதிக்க மறுப்பதோடு, தங்களது சொந்த நலன்களுக்காக இந்திய விவசாயத்தையே அழிக்கத் தயாராகிவிட்டது. விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், குறைந்தபட்ச ஆதரவு விலை, அரசு கொள்முதலைத் தொடரவும் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியிலும் தொடா்ந்து குரல் எழுப்பும்' என்று ராகுல் காந்தி கூறியுள்ளாா்.

# மதுபோதையில் தகராறு: மனைவி தூக்கில் தொங்கியதை சிரித்தபடி வீடியோ எடுத்த கணவர்

திருப்பதி, மார்ச் 16:

ஆந்திர மாநிலம் ஒங்கோலை சேர்ந்தவர் ஸ்ரீராம் ஸ்ரீனிவாசலு. இவர் ஒய்.எஸ்.ஆர் கடப்பா மாவட்டம். நந்தலூரு வில்ரெயில் எஞ்சின் டிரைவராக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இதனால் நந்தலூரு அடுத்த நாகிரெட்டி பள்ளியை சேர்ந்த கிருஷ்ணவேணி (வயது 30) என்பவரை கடந்த 2016- ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். தம்பதியினர் ராஜம்பேட்டை, போயனப்பள்ளியில் வாடகை வீட்டில் வசித்து சீனிவாசலு மதுப்பழக்கத்திற்கு அடிமையானதால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. கணவன், மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. அப்போது கிருஷ்ணவேணி கதவை உள்புறமாக பூட்டிக்கொண்டு மின்விசிறியில் சேலையால் தூக்கு மாட்டி க்கொள்ள முயன்றார். அறைக்கு வெளியே இருந்து இதனை பார்த்த சீனிவாசலு சிரித்தபடி சரியாக தூக்கில் தொங்கு என கூறியபடி மனைவி தற்கொலை செய்வதை தனது செல்போனில் வீடியோ பதிவு செய்தார். அப்போது நன்றாக தூக்கு மாட்டிக்க என தெரிவித்தார். மனைவி தன் கண்முன்னே தூக்கில் துடிதுடித்து தொங்குவதை கண்டும் அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை. கிருஷ்ணவேணி இறந்த பிறகு அக்கம் பக்கம் தனது மனைவி தூக்கில் தொங்குவதாக தெரிவித்தார். அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆஸ்பத்திரியில் பரிசோதித்த டாக்டர்கள்' அவர் ஏற்கனவே இறந்து விட்ட தாக தெரிவித்தனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து சீனிவாசலுவை பிடித்து விசாரணை நடத்தினர் விசாரணையில் அவர் கடந்த 6 மாதங்களாக தற்கொலை செய்து கொள்வேன் என மிரட்டி வந்தார். தற்போதும் என்னை மிரட்டுவதற்காக தூக்கில் தூங்குவது போல் நடிக்கிறார் என நினைத்தேன். ஆனால் உண்மையிலேயே அவர் தூக்கில் தொங்கி இறந்து விட்டார் என தெரிவித்தார். போலீசார் அவரது செல்போனை பறிமுதல் செய்து பார்த்தபோது மனைவி தூக்கில் தொங்கு வதை மனிதாபிமானம் இன்றி வீடியோ எடுத்தது தெரிய வந்தது.

# நொய்டாவில் புதிய சர்வதேச விமான நிலையம்: ஜெர்மன் - இந்தியா பிஸினஸ் அலையன்ஸுடன் உ.பி. அரசு ஒப்பந்தம்

புதுடெல்லி, மார்ச் 16:

உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் புதிய சர்வதேச விமான நிலையம் உருவாகிறது. பிராங்க்பர்ட் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள நகரங்களின் தொழில் வளரச்சி அமைப்பான 'ரைன் மெயின் இன்னவேஷன் அமைப்பு' மற்றும் தமிழர்களின் 'ஜெர்மன் - இந்தியன் பிஸினஸ் அலையன் ஸூன் (ஜிஐபிஏ)' உ.பி. அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.




டெல்லி புறநகர் பகுதியான நொய்டாவில், ஆசியாவிலேயே மிகப்பெரியதாக சர்வதேச விமான நிலையம் உருவாகிறது. இது ஐரோப்பாவின் நுழைவு வாயிலாக விளங்கப் போகிறது.

இந்த சர்வதேச விமான நிலையம் முழுமையான செயல்பாட்டுக்கு வரும்போது ஆண்டுக்கு 7 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாக இருக்கும். தொழில்துறையினரைப் பெருமளவில் ஈர்க்கும் விதமாக, விமான நிலையத்தைச் சுற்றி தொழில் மற்றும் தளவாடங்களை மையமாகக் கொண்ட தொகுப்புகள் (கிளஸ்டர்கள்) உருவாக்கப்படுகின்றன.

வளர்ந்து வரும் இந்த விமான மற்றும் தொழில்துறை தடத்தில் பிராங்க்பர்ட் விமான நிலைய பிராந்தியத்தை அதன் தொழில்துறை மையங்களான ரஸல் ஷீம், ரவுன்ஹைம் மற்றும் கெல்ஸ்டெர்பாக் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், இந்த ஒப்பந்தத்தின்படி சரக்கு விமானம் மற்றும் விநியோக சங்கிலி தீர்வுகள், இயந்திர பொறியியல் மற்றும் விமான நிலைய தொழில்நுட்பம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

ஜிஐபிஏவுடனான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 3 மாதங்களுக்குள் ஒரு கட்டமைக்கப்பட்ட செயல் திட்டத்தை உருவாக்க குழு அமைக்கப்படும். இது தொடர்பாக ஏற்கெனவே பிரதிநிதிகள், துறை சார்ந்த முயற்சிகள் மற்றும் முதலீட்டாளர்கள் என பல அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஜிஐபிஏ வானது ஜெர்மனி - இந்திய பொருளாதார பிராந்தியங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை செயல்படுத்துவதற்கு தேவையான உதவிகளை அளிக்கும்.




## சென்னை அரும்பாக்கத்தில் தாய், மகளை கத்திமுனையில் மிரட்டி 27 பவுன் நகைகள் கொள்ளை



**அரும்பாக்கம், மார்ச்.16:** அரும்பாக்கத்தில் நள்ளிர வில் வீடுபுகுந்து தாய் மற்றும் மகளை கத்தி முனையில் மிரட்டி, 27 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

சென்னை, அரும்பாக்கம், என்.எஸ்.கே 4-வது தெருவைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். மாநகர போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி வரும் இவருக்கு, ருக்மணி (54) என்ற மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். நேற்று முன்தினம் இரவு ரவிச்சந்திரன் வழக்கம் போல பணிக்குச் சென்றுவிட்டார். வீட்டில் ருக்மணியும் அவரது மகளும் மட்டும் தனியாக இருந்துள்ளனர். நள்ளிரவில் இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, திடீரென வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுள்ளது.

தூக்கக் கலக்கத்தில் ருக்மணி கதவைத் திறந்த போது, கத்தியுடன் மர்ம நபர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். ருக்மணியை தள்ளிவிட்டு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த அந்த நபர், தாய் மற்றும் மகள் இருவரையும் கத்தி முனையில் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்து. 'சத்தம் போட்டால் கொலை செய்துவிடுவேன்' என்று மிரட்டிய கொள்ளையன், பீரோவில் இருந்த 27 பவுன் தங்க நகைகள், ரூ.8,500 பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றார்.

இந்த அதிர்ச்சி சம்பவத்தில் இருந்து மீண்ட ருக்மணி, உடனடியாக அரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீவிர விசாரணை நடத்தினர்.

அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை போலீஸார் கைப்பற்றி கொள்ளையனை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர் முகப்பேரில் பதுங்கி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, முகப்பேர் விரைந்த போலீஸார், பதுங்கியிருந்த சுப்பிரமணி (28) என்ற இளைஞரை கைது செய்து, அவரிடம் இருந்து 27 பவுன் நகை, பணத்தை பறிமுதல் செய்தனர். கைதானவரிடம் போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை - சென்ட்ரல் வந்த ரயிலில் ரூ.71.37 லட்சம் தங்கம், வெள்ளி சிக்கியது



**சென்னை, மார்ச்.16:** கர்நாடகா ஹுப்ளியில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு வந்த ரயிலில் பயணிகளை கண்காணித்து இருவரது பைகளை சோதித்தபோது, ரூ.8 லட்சத்து 800 மதிப்பிலான 2.86 கிலோ எடைக்கொண்ட தங்கம், வெள்ளி இருந்தது.

அந்த நபர், திருப்பதியைச் சேர்ந்த வெங்கடேஸ்வரலு. ஆந்திர மாநிலம் புரோட்டாட்டூர் பகுதியைச் சேர்ந்த ஷேக் முனாவர் பாஷாவிடம் சோதனை செய்தபோது, ரூ.63.37 லட்சம் மதிப்பிலான தங்க ஆபரணங்கள் இருந்தது. இரு வரையும் ரயில்வே போலிஸார் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

## பிளஸ் 2 தேர்வில் முறைகேடு: 5 ஆசிரியர்களுக்கு நோட்டீஸ்



**விழுப்புரம், மார்ச்.16:** தமிழகத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வுநடைபெறுகிறது. இதில், பிளஸ் 2 வேதியியல் தேர்வு கடந்த 9-ம் தேதி நடைபெற்றது. விழுப்புரத்தில் உள்ள இரு பிரபல தனியார் பள்ளிகளில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளன.

இரு மையங்களிலும் விடைகள் அச்சிடப்பட்ட காகிதங்களை பார்த்து மாணவர்கள் தேர்வு எழுதியதாகவும், இதனை பார்த்த நிலையான பறக்கும் படையினர், நடவடிக்கை எடுக்காமல் திரும்பி விட்டதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து பள்ளிகல்வித் துறைக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் அந்த மையங்களில் கண்காணிப்பு பணிக்குச் சென்ற இரு பெண் ஆசிரியர்கள் உட்பட 5 ஆசிரியர்களிடம் விளக்கம் கேட்டு முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, "நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களது பதிலைப் பெற்ற பிறகு, உரியநடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் உள்ள தேர்வு மையம் ஒன்றில், கடந்த ஆண்டு பிளஸ் 2 வேதியியல் தேர்வில், ஒரு பள்ளியில் அனைத்து மாணவர்களும் 100 மதிப்பெண்கள் பெற்றது சர்ச்சையானது குறிப்பிடத்தக்கது.

## ஓட்டல்களுக்கு மின்சார கட்டணத்தில் சலுகை- ஒரு யூனிட்டுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும் என அறிவிப்பு



**சென்னை, மார்ச்.16:** ஈரான் போர் காரணமாக வணிக கியாஸ் சிலிண்டர் வினியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஓட்டல் தொழில் கடுமையாக முடங்கி உள்ளது.

ஓட்டல்களில் கியாசுக்கு பதிலாக விறகு அடுப்புகள் மூலம் சமையல் செய்வதால் பல்வேறு உணவுகள் வினியோகம் நிறுத்தப்பட்டு உள்ளன. பல இடங்களில் ஓட்டல்கள் மூடப்பட்டு உள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு ஓட்டல் உரிமையாளர்கள் சென்னை தலைமை செயலகத்துக்கு சென்று ஓட்டலில் ஏற்படும் பாதிப்பை சரிசெய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று பல்வேறு துறை அதிகாரிகளுடன் சென்னை தலைமை செயலகத்தில் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டார். இதில் உணவுத்துறை அதிகாரிகள், மின் வாரிய அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் வணிக கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நீங்கும் வரையில் ஓட்டல்களுக்கு மின் கட்டணத்தில் சலுகை அளிக்க முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக மின் வாரிய தலைவர் ராதா கிருஷ்ணன் அளித்த பேட்டி வருமாறு:-

ஓட்டல்கள், உணவகங்கள், டீக்கடைகளில் வணிக சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அவர்கள் மின்சார அடுப்பு பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்களுக்கு போதிய அளவில் மின்சாரம் வழங்கப்படும். மின்சார அடுப்பு பயன்படுத்தும் நிலையில் ஓட்டல்கள், உணவகங்கள், டீக்கடைகளில் மின்சார பயன்பாட்டு அளவு அதிகரிக்கும் நிலையில் அவர்களுக்கு மின் கட்டணத்தில் சலுகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து உள்ளார்.

வர்த்தக சிலிண்டர் தட்டுப்பாடு நீங்கும் வரையில் உணவகங்கள், டீக்கடைகளுக்கு கியாசுக்கு மாற்றாக மின் அடுப்புகளை பயன்படுத்தினால் கூடுதலாக வரும் மின்சார பயன்பாட்டில் ஒரு யூனிட்டுக்கு ரூ.2 மானியமாக வழங்கப்படும்.

டீக்கடையாக இருந்தாலும் மின்சார கட்டணத்தில் இந்த சலுகை அளிக்கப்படும். கூடுதல் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது.

வணிக பயன்பாட்டு கியாஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு நீங்கும் வரையில் இந்த சலுகை தொடரும். கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக மின்சார அடுப்புகளை பயன்படுத்தினால் கூடுதலாக மின்சார தேவையும் அதிகரித்து உள்ளது.

தமிழகத்தில் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து ஆலோசனை நடத்தி இந்த சலுகையை வழங்குமாறு அறிவுறுத்தி உள்ளார்.

வணிக நிறுவனங்கள் வைத்த கோரிக்கைக்கு ஏற்ப இந்த சலுகையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதில் ஏ.சி. பயன்பாடு உள்ளிட்ட என்ன காரணத்தால் மின் கட்டணம் அதிகரித்துள்ளது என்று பிரித்து பார்க்க மாட்டோம். அனைவருக்குமே யூனிட்டுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும்.

இதனால் இந்த மானியம் எல்லோரையும் போய் எளிதாக சேரும்.

மேலும் கியாஸ் சிலிண்டர் பயன்படுத்தும் குறு-சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் மின் அடுப்புகளை பயன்படுத்தும் நிலையில் அவர்கள் மின் அடுப்புகளை வாங்குவதற்காக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.3.25 லட்சம் கடன் மானியத்துடன் வழங்கப்படும்.

பெண்களுக்கு மகளிர் தொழில்முனைவோர் திட்டத்தின்கீழ் 25 சதவீதம் அல்லது ரூ.2 லட்சம் மானியத்துடன் ரூ.10 லட்சம் கடன் வழங்கப்படும். அம்பேத்கார் தொழில் முன்னோடி திட்டத்தின்கீழ் 35 சதவீதம் அல்லது ரூ.1கோடி வரை மானியத்துடன் கடன் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் 60 ஆயிரத்து 698 தொழிற்சாலைகளில் தற்போது விறகு மற்றும் கியாஸ் ஆகியவற்றை பயன்படுத்தி வரும் நிலையில் அவர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் தகவல் சொல்லிவிட்டு மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய்கறி-பழங்கள் வீணாவதாக கவலைப்படுகிறார்கள். அவர்கள் தமிழகத்தில் உள்ள 194 உழவர் சந்தைகளில் எந்தவித கட்டுப்பாடுமின்றி காய்கறி, பழங்களை விற்பனை செய்யலாம் என்றார்.

## பெட்ரோல் நிலையங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க கோரிக்கை

**சென்னை, மார்ச்.16:** தமிழகத்தில் நிலவி வரும் செயற்கையான பெட்ரோல் தட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு, பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம் தமிழக டிஜிபி-யிடம் கோரிக்கை மனு அளித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் கே.பி.முரளி அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: உலகளாவிய சூழல்களால் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாக, தமிழகத்தில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் கடந்த சில நாட்களாக மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. இந்த செயற்கை தேவையால் பொது மக்கள் பலரும் பிளாஸ்டிக் கேன்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத பாத்திரங்களில் பெட்ரோல், டீசலை நிரப்ப வற்புறுத்துகின்றனர்.


பெட்ரோலிய சட்ட விதிகளின் படி, அங்கீகரிக்கப்படாத பாத்திரங்களில் எரிபொருளை விநியோகிப்பது சட்ட விரோதமானது. இது ஊழியர்களுக்கும், குடியிருப்பு பகுதிகளுக்கும் மிகப்பெரிய தீ விபத்து அபாயத்தை ஏற்படுத்தும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக கேன்களில் பெட்ரோல் வழங்க மறுக்கும் ஊழியர்களை, சில நபர்கள் தரக்குறைவாக பேசுவதும், உடல் ரீதியாகத் தாக்குவதும் அதிகரித்து வருகிறது . பல இடங்களில் இது சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இப்படி கேன்களில் எரிபொருளை வாங்கிச் செல்வது, கள்ளச்சந்தையில் எரிபொருளைப் பதுக்குவதற்கு வழிவகுக்கிறது.

கேன்களில் பெட்ரோல் வழங்க வேண்டாம் என அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், நகர்ப்புறங்களில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் கூட்டத்தை முறைப்படுத்தவும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும் குறைந்தது ஒரு காவலரையாவது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தம்மம்பட்டி சிவன் கோயிலில் பேவர் பிளாக் பூமி பூஜை விழா!

**தம்மம்பட்டி, மார்ச்.16:** தம்மம்பட்டி ஸ்ரீ காசி விசாலாட்சி உடனுறை காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் உள்ள மண் தரையை ரூ.8.5 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைப்பதற்கான பூமி பூஜை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.



தம்மம்பட்டியிலுள்ள ஸ்ரீகாசி விசாலாட்சி உடனுறை காசி விஸ்வநாதர் திருக்கோயில், சுமார் 800 ஆண்டுகள் பழமையானது என்று கூறப்படுகிறது.

இந்த கோயில் வளாகத்தில் உள்ள மண் தரை தரை தளம் முழுமையும் பேவர் பிளாக் போட என சுமார் ரூ.8.5 லட்சம் மதிப்பீட்டில் செய்ய தம்மம்பட்டி அனைத்து சமுதாய மக்கள் முடிவு செய்துள்ளனர். அதற்கான பூமி பூஜை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கோயில் தலைமை அறங்காவலர் சண்முகம், கோவில் திருப்பணி குழு தலைவர் திருச்செல்வன், அரசு ஒப்பந்ததாரர் மோகன், தொழிலதிபர்கள் செல்லப்பன், மளிகை சீனிவாசன் உள்ளிட்ட நன்கொடையாளர்கள், அறங்காவலர்கள், ஊர் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

## ரூ.5 லட்சத்துக்கு மேல் ரூ.500 நோட்டுகளை வழங்கத் தடை: வங்கிகளுக்கு ஆர்பிஐ அறிவுறுத்தல்



**சென்னை, மார்ச்.16:** சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்களுக்கான 'கவனிப்புகளுக்கு' கடிவாளம் போட தேர்தல் ஆணையம் தயாராவதற்கு முன்னதாகவே முறையற்ற பணப் 'பட்டுவாடாக்களை' கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி தயாராகிவிட்டது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டால், உரிய ஆவணங்கள் இல்லாமல் குறிப்பிட்ட தொகைக்கு மேல் ரொக்கம் எடுத்துச் செல்லவும் பரிசுப் பொருட்களை எடுத்துச் செல்லவும் தேர்தல் ஆணையம் தடை விதிக்கும். இதைக் கண்காணிக்க ஆங்காங்கே வாகன சோதனைகளும் நடக்கும். ஆனால், தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னதாகவே, ரிசர்வ் வங்கி சத்தமில்லாமல் முறையற்ற பணப் பரிவர்த்தனைகளை முடிந்தவரை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

அதன்படி தற்போது வங்கிகளில் இருந்து கட்டுக் கட்டாக ரூ.500 நோட்டுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க ரிசர்வ் வங்கி தடை விதித்துள்ளது. அதனால் தற்போது எந்த வங்கிக் கிளையிலும் 500 ரூபாய் நோட்டுகளை பெருமளவுக்கு எடுக்க முடியவில்லை என்று சாமானியர்களே புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இது தொடர்பாக வங்கி வட்டாரங்களில் விசாரித்தபோது, "ரூ.5 லட்சத்துக்கும் அதிமாக 500 ரூபாய் நோட்டுகளை வழங்க வேண்டாம் என்று வாய்மொழி உத்தரவு வந்துள்ளதால் அவ்வாறு மொத்தமாக ரூ.500 கட்டுகளை யாருக்கும் வழங்குவதில்லை.

ஏடிஎம்-களில் 500 ரூபாய் நோட்டுகள் கிடைப்பதற்கே தற்போது முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனினும் இது தொடர்பாக எழுத்துபூர்வமாக எந்த உத்தரவும் இதுவரை எங்களுக்கு வரவில்லை" என்று தெரிவித்தனர்.

அதேசமயம், 500 ரூபாய் நோட்டுகளை மொத்தமாக வாடிக்கையாளர்களுக்கு வழங்க கட்டுப்பாடுகள் இருந்தாலும் 200, 100, 50, 20 ரூபாய் கட்டுகளை தாராளமாக வங்கி கிளைகளில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பெருமளவு தொகையை 200, 100, 50, 20 ரூபாய் கட்டுகளாக எடுத்துச் செல்வதும், அதை வாக்காளர்களுக்கு விநியோகிப்பதும் கடினம் என்பதை உணர்ந்தே 500 ரூபாய் நோட்டுகளுக்கு மட்டும் ரிசர்வ் வங்கி கிடுக்குப்பிடி போட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஓட்டுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்க ரிசர்வ் வங்கி வழியாக தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைஎந்தளவுக்குப் பலன் கொடுக்கும் எனத் தெரியவில்லை. ஏனென்றால், வாக்குக்குப் பணம் கொடுப்பதையும் அரசியல்வாதிகள் இப்போது 'டிஜிட்டல் மயமாக்கி' விட்டார்கள். எனவே, அதைத் தடுக்க என்ன வழி என்று தேர்தல் ஆணையம் இன்னும் கொஞ்சம் பெட்டராக யோசித்தால் நல்லது.

## பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த காவல் அதிகாரி கைது!

**கோவை, மார்ச்.16:** கோவை புதூர் 4 ஆவது போலீஸ் பட்டாலியன் படைப் பிரிவில் பணி புரிந்த பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த காவல் அதிகாரி செந்தில்குமார் கைது செய்யப்பட்டார்.

கோவை புதூர் பகுதியில் தமிழ்நாடு 4 ஆவது பட்டாலியன் படைப் பிரிவு உள்ளது. இதில் கமாண்டராக (காவல் கண்காணிப்பாளர் அந்தஸ்து) செந்தில்குமார் பணியாற்றி வந்தார். இவர் அங்கு பணி செய்யும் பெண்கள் மற்றும் பெண் காவலர்களுக்கு பல்வேறு பாலியல் தொந்தரவுகளை கொடுத்து வந்ததாக தெரிகிறது. மேலும் அவர் பெண்களிடம் பாலியல் ரீதியாக அத்துமீறி பேசி வந்துள்ளார். இது தொடர்பான புகார்கள் காவல் உயரதிகாரிகளிடம் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் மீது துறை ரீதியான விசாரணை நடைபெற்று வந்த நிலையில், கடந்த மாதம் அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பெண்கள் போத்தனூரில் உள்ள கோவை தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்த புகாரின் பேரில் அனைத்து மகளிர் காவலர் பத்து பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து மகளிர் காவலர்கள் எஸ்.பி. செந்தில்குமாரை கைது செய்தனர். தொடர்ந்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைத்தனர். தொடர்ந்து அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பாலியல் புகாரில் உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் பாதைகள்: இறுதி ஆய்வுக்கு அனுமதி

**சென்னை, மார்ச்.16:** தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் ரயில் பாதைகள் அமைப்பதற்கான இறுதிக்கட்ட ஆய்வு நடத்த ரயில்வே வாரியம் அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை - அரக்கோணம், அரக்கோணம் - ரேணிகுண்டா, சென்னை - கூடூர் ஆகிய ரயில் வழித்தடஙளில் 5, 6-ஆவது பாதைகள், விழுப்புரம் - திருச்சி - திருநெல்வேலி - நாகர்கோயில் வழித்தடத்தில் 3, 4 -ஆவது பாதைகள், திருச்சி - காரைக்குடி - மானாமதுரை - மதுரை வழித்தடத்தில் 2-ஆவது பாதை, போத்தனூர் - பொள்ளாச்சி - பாலக்காடு வழித்தடத்தில் 2-ஆவது பாதை அமைக்கவும் இறுதிக்கட்ட ஆய்வு நடத்துவதற்கான அனுமதியை ரயில்வே வாரியம் அளித்துள்ளது.

மேலும், திருச்சியில் ஜி கார்னர் பகுதியில் உயர்மட்ட சுழற்பாலம் அமைப்பதற்கான தடையில்லாச் சான்றிதழையும் ரயில்வே வாரியமமைத்துள்ளது. இதனால், திருச்சி மக்களின் 16 ஆண்டுகால கோரிக்கை நிறைவேறியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்தப் பாலத்துக்காக ஒன்றரை ஆண்டுகளாக பணிகள் மேற்கொண்டதாகக் கூறிய மதிமுக எம்.பி. துரை வைகோ, மத்திய அரசுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

# சிலிண்டர்கள் பதுக்கி வைத்து விற்பனை: திருப்பூரில் கியாஸ் நிறுவனத்துக்கு 'சீல்'



**திருப்பூர், மார்ச்.16:** ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் போர் காரணமாக இந்தியா முழுவதும் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகம் முடங்கியுள்ளது. திருப்பூரில் வர்த்தக கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில் உணவுப்பண்டங்கள்தயாரிப்பை குறைத்துவிட்டனர். சில ஓட்டல்கள் மூடப்பட்டுவிட்டன.

வீட்டு உபயோக சிலிண்டர்களை முன்பதிவு செய்ய தனியார் கியாஸ் நிறுவனங்களில் கூட்டம் அதிகரித்து வருகிறது. இந்த தட்டுப்பாட்டை காரணம் காட்டி, கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்வதாக தொடர்ந்து புகார் எழுந்து வருகிறது. இவ்வாறு கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி வைத்தால் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுவர் என்று எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே உத்தரவின் பேரில், மாவட்ட வழங்கல் அதிகாரி தலைமையிலான குழுவினர் தனியார் கியாஸ் நிறுவனங்கள் மற்றும் குடோன்களில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். வீரபாண்டி வாய்க்கால்மேடு பாரியூர் அம்மன் நகரில் உள்ள தனியார் கியாஸ் நிறுவனத்தில் சிலிண்டர்கள் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதாக நல்லூர் நுகர்வோர் நல மன்றம் சார்பில் மாவட்ட வழங்கல் அதிகாரியிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட தனியார் கியாஸ் நிறுவனத்தில் மாவட்ட வழங்கல் அதிகாரி சரவணன் சென்று ஆய்வு செய்தார். ஆனால் அந்த நிறுவனம் மூடப்பட்டு இருந்தது.

சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளரிடம் செல்போனில், அதிகாரி தொடர்பு கொண்டதற்கு அவர் சரிவர பதில் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. பின்னர் சம்பந்தப்பட்ட கட்டிடத்துக்குள் கியாஸ் சிலிண்டர்கள் இருக்க வாய்ப்பு உள்ளதால் அந்த கட்டிடத்தை, மாவட்ட வழங்கல் அதிகாரி பூட்டி 'சீல்' வைத்து நடவடிக்கைமேற்கொண்டார். மேலும் சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர் நேரில் வந்து விளக்கம் அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பெரம்பலூரில் தனிமையில் இருந்தவர்களை தாக்கி காதலன் கண்முன்னே இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர்கள்



**பெரம்பலூர், மார்ச்.16:** பெரம்பலூர் அருகே துறையூர் சாலையில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 21 வயது வாலிபர் அவரது காதலியை மோட்டார் சைக்கிளில் அழைத்து கொண்டு, பாடாலூர் அருகே காரை கிராமத்திற்கு சென்றிருந்தார். பின்னர் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள ஒரு இடத்தில் தனிமையில் பேசிக் கொண்டிருந்தார்.

இதனை கண்காணித்து பின்தொடர்ந்து சென்ற வாலிபர்கள் சிலர் தனிமையில் இருந்த காதலர்களை மிரட்டி தாக்கி, அந்த பெண்ணிடம் காதலன் கண் முன்னே பாலியியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தனது காதலியை அழைத்துக்கொண்டு அங்கிருந்து சொந்த ஊர் சென்ற வாலிபர் நடந்ததை தனது நண்பர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் அவர்களுடன் பாடாலூர் அருகே உள்ள ஒரு கிராமத்திற்கு சென்று வாலிபர் ஒருவரை பிடித்து சரமாரியாக தாக்கியுள்ளார்.

இதனை பார்த்த ரோந்து போலீசார் அவர்கள் அனைவரையும் பிடித்து, பாடாலூர் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது காரை கிராமத்தில் தனது காதலியிடம் தனிமையில் பேசிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்து ஒரு கும்பல் தாங்கள் இருவரையும் தாக்கி, மிரட்டி தனது கண் முன்னே தனது காதலியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகவும், அதனால் நண்பர்கள் சிலருடன் அவர்களை தேடிவந்தபோது ஒருவன் மட்டும் கண்ணில் தென்பட்டதால் அவனை பிடித்து தாக்கியதாகவும் அந்த வாலிபர் தெரிவித்தார்.

ஆனால் தனது காதலி யார், எந்த ஊரைச் சேர்ந்தவர் போன்ற விபரங்களை தெரிவிக்க மறுத்துவிட்டார். அவரைப் பற்றிய விவரம் தெரிய வந்தால் அவர்களது பெற்றோர் உள்ளிட்ட குடும்பத்தாருக்கு பெருத்த அவமானமும், மன உளைச்சலும் ஏற்பட்டு விடும் என்பதால், போலீசாரை அணுகாமல், தனது காதலியிடம் அத்துமீறலில் ஈடுபட்ட வாலிபர்களை நண்பர்கள் சிலர் உதவியுடன் தேடிக் கண்டுபிடித்து தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், புகார் அளிக்க விருப்பம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதனால், குழப்பமடைந்துள்ள பாடாலூர் போலீசார் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில், சந்தேகத திற்கிடமாக மூன்று வாலிபர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிமையில் பேசிக் கொண்டிருந்த போது காதலன் கண்முன்னே இளம்பெண் ஒருவர் வாலிபர்கள் சிலரால் பாலியல் சீண்டலில் பாதிக்கப்பட்ட சம்பவம் பாடாலூர் பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தி இருக்கிறது.

# வேளச்சேரி - பரங்கிமலை தடத்தில் ரயில் சேவை தொடங்கியது: தென் சென்னை மக்களின் கனவு திட்டம் நிறைவேறியது






**சென்னை, மார்ச்.16:** தென் சென்னை மக்களின் நீண்ட நாள் கனவு திட்டமான, வேளச்சேரி - பரங்கிமலை தடத்தில் மின்சார ரயில் சேவை நேற்று தொடங்கியது. இதனால் பல முக்கிய இடங்களுக்கு எளிதில் செல்ல முடியும் என மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சென்னை கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தில், தினசரி 80-க்கும் மேற்பட்ட மின்சார ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இம்மார்க்கத்தில் வேளச்சேரி - பரங்கிமலை இடையிலான 5 கி.மீ. தொலைவை இணைக்கும் வகையில், பறக்கும் ரயில் வழித்தட திட்டப்பணி, 2008ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆனால், ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகரில் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினையால் பணிகள் முடங்கின. பின்னர் 2021ம் ஆண்டுக்குப் பிறகு, பணிகள் மீண்டும் தொடங்கின.

கடந்த 17 ஆண்டுகளாக நடந்து வந்த ரயில் இணைப்பு பணிகள் முடிவடைந்து, பல்வேறு கட்ட சோதனைகளுக்குப் பிறகு நேற்று பயணிகள் போக்குவரத்து சேவை தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, பரங்கிமலையில் இருந்து வேளச்சேரி வழியாக கடற்கரைக்கு முதல் மின்சார ரயில் சேவை நேற்று அதிகாலை 5 மணிக்கு தொடங்கியது. இந்த ரயிலில் ரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், கீழ்கட்டளை, மடிப்பாக்கம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பயணிகள், சமூக ஆர்வலர் கள், பல்வேறு குடியிருப்போர் நலச்சங்கத்தை சேர்ந்தவர்களும் பயணித்தனர்.

இம்மார்க்கத்தில் இயக்கப்பட்ட மின்சார ரயிலில் பயணம் செய்ய புழுதிவாக்கத்தைச் சேர்ந்த வி.ராஜசேகர், ஜி.சிவக்குமார். எம். அருள் தினகர் ஆகியோர் கூறியதாவது: இந்த ரயில் சேவையை நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்தோம். இப்போது நிறைவேறியுள்ளது, மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் உள்பட சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு நேரடி யாக ரயில் சேவை இல்லாமல் இருந்தது. தற்போது, வேளச்சேரி - பரங்கிமலை ரயில் தடம் இணைப்பு மூலமாக, சென்னையில் சென்ட்ரல், எழும்பூர், கோயம்பேடு, தாம்பரம் என பல முக்கிய இடங்களுக்கு எளிதாகச் செல்ல முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

அறிவிப்பு பலகை வேண்டும்: வேளச்சேரி ஏஜிஎஸ் காலனி குடியிருப்போர் நலச்சங்க செயலாளர் கீதா கணேசன் மற்றும் சங்க நிர்வாகிகள் ரயிலில் பயணித் தனர். புதிய ரயில் சேவை குறித்து. கீதா கணேசன் கூறும்போது. "எங்களின் நீண்ட கால கோரிக்கை நிறைவேறியுள்ளது. வேளச்சேரி வழியாக சென்னை கடற்கரைக்கு பயணிக்கும் பயணிகளின் வசதிக்காக, பரங்கிமலை நிலையத்தில் ஆங்காங்கே அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

அதேபோல் புழுதிவாக்கம் ரயில் நிலையத்திலும் வைக்க வேண்டும், மேலும் அங்கு அமைக்கப்பட்டு வரும் நகரும் படிக்கட்டு பணியை விரைவாக முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

இது தவிர, ஆதம்பாக்கம் ரயில் நிலைய பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டும்" என்றார்.


முதல் நாளில் ரயில்கள் அட்டவணைப்படி இன்றி காலதாமத மாக இயக்கப்பட்டதால் பயணிகள் அவதியடைந்தனர். எனவே, இனி ரயில்களை குறித்த நேரத்தில் இயக்குவதோடு, அனைத்து ரயில் நிலையங்களிலும் கால அட்டவணையை வைக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர் பயணம்: பரங்கிமலை ரயில் நிலையத்துக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று காலை வந்தார். அங்கிருந்து வேளச்சேரி வரையும், மறுமார்க்கமாக பரங்கிமலை வரையும் மின்சார ரயிலில் பயணித்தார். பின்னர் அவர் கூறும் போது, "வேளச்சேரி - பரங்கிமலை பறக்கும் ரயில் திட்டம் தாமதமானதற்கு அதிமுக ஆட்சியே காரணம். அவர்கள் முறையாக நிலத்தை கையகப்படுத்தி ரயில்வே துறையிடம் ஒப்படைக்கவில்லை.

முன்பே திறக்க வேண்டிய திட்டம் இது. காலம் தாழ்த்தி விட்டு தற்போது அவசர கதியில் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. ரயில்வே தரப்பில் முறையாக எங்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை" என்றார்.

86 ரயில் சேவைகள்: சென்னை கடற்கரை பரங்கிமலை இடையே 86 ரயில் சேவைகள் இயக்கப்பட உள்ளன. மேலும், சென்னை கடற்கரை - வேளச்சேரி இடையே 4 ரயில் சேவைகளும், வேளச்சேரி-பரங்கிமலை இடையே 6 ரயில் சேவைகளும் இயக்கப்படுகின்றன.

# பெண் கொடுக்க மறுப்பு: கடத்த முயன்ற கும்பல்- தடுக்கப்போன தாயை வெட்டிக் கொலை செய்த கொடூரம்



**புதுக்கோட்டை, மார்ச்.16:** புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள நெடுவாசல் பகுதியை சேர்ந்தவர் சுரேஷ். விவசாயியான இவர், விவசாய கூலி வேலைக்கும் சென்று வந்தார். இவருக்கு திருமணமாகி காளியம்மாள் என்ற மனைவி இருந்தார். இந்த தம்பதிக்கு சுவேதா (வயது 20), சுபதர்ஷினி (18) ஆகிய இரண்டு மகள்களும், பாலமுருகன் (12) என்ற மகனும் உள்ளனர்.

இதற்கிடையே சொந்த ஊரில் விவசாயம் குறைந்ததால் செங்கல்பட்டுக்கு சுரேஷ் கூலி வேலைக்கு சென்றார். அங்கு விஜயலட்சுமி என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு அவரை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார். நெடுவாசல் பகுதியிலேயே வெவ்வேறு வீடுகளில் சுரேஷ் காளியம்மாள், விஜயலட்சுமி ஆகியோருடன் குடும்பம் நடத்தி வந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சுரேசின் இரண்டாவது மனைவியான விஜயலட்சுமியின் தம்பி செங்கல்பட்டை சேர்ந்த விவின் (34) என்பவர் சுரேசின் முதல் மனைவியான காளியம்மாளின் மகள் சுபதர்ஷினியை திருமணம் செய்துகொள்ள விரும்பினார். இதற்காக அவர் முறைப்படி பெண் கேட்டு சென்றுள்ளார்.

ஆனால் காளியம்மாள் மற்றும் அவரது மகள் சுபதர்ஷினி இருவருக்கும் இதில் விருப்பமில்லாமல் பெண் கொடுக்க மறுத்துள்ளனர். பெண் கொடுக்குமாறு சுரேஷ் தனது முதல் மனைவியிடம் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினையால் இரண்டாவது மனைவியான விஜயலட்சுமி கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

இந்தநிலையில் இன்று அதிகாலை சுமார் 3 மணி அளவில் விவின் அடையாளம் தெரியாத இரண்டு நபர்களுடன் சுபதர்ஷினியை கடத்திச் செல்ல நெடுவாசலுக்கு வந்துள்ளார். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த சுபதர்ஷினியின் வாயை துணியால் பொத்தியுள்ளனர். இதில் தூக்கம் கலைந்த அவர் அச்சத்தில் கூச்சல் போட்டுள்ளார்.

இதனைப் பார்த்த அவரது தாய் காளியம்மாள் எப்படியாவது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று போராடியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த விவின் மற்றும் இரண்டு பேர் சேர்ந்த கும்பல் காளியம்மாளை அரிவாளால் சரமாரியாக வெட்டினர். இதில் தலை மற்றும் உடலின் பல்வேறு இடங்களில் பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிய காளியம்மாள் ஒருசில விநாடிகளில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பின்னர் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் அங்கிருந்த தப்பிச்சென்றனர்.

இது குறித்து அக்கம்பக்கத்தினர் கொடுத்த தகவலின் பேரில் வடகாடு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று கொலையுண்ட காளியம்மாள் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் தப்பியோடி கும்பலை போலீசார் வலை வீசி தேடிவருகிறார்கள். கிராமப் பகுதியில் இன்று அதிகாலையில் நடந்த கொலை சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




# ஆட்சியில் பங்கு என்றபோதிலும், விஜய் தனித்து விடப்பட்டார்: சீமான்





**சென்னை, மார்ச்.16:** ஆட்சியில் பங்கு என்றபோதிலும், தவெகவுடன் கட்சிகள் கூட்டணி வைக்கவில்லை என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

காரைக்குடியில் செய்தியாளர்கள் சந்திப்பில் சீமான் பேசுகையில், "கூட்டத்தோடு நிற்பதற்கு யாருக்கும் வீரமும் துணிவும் தேவையில்லை. தனித்து நிற்கவே வீரமும் துணிவும் தேவை.

நாங்கள் வீரர்கள் என்பதால், தனித்து நிற்கிறோம். நாங்கள் மக்களை முழுமையாக நம்புகிறோம். அவர்கள் கட்சியையும் தலைவர்களையும் நம்புகிறார்கள்.

விஜய் தனித்து நிற்பதாய் சொல்லவில்லை. ஆட்சியில் பங்கு தருவதாய் எல்லோரையும் அழைத்துப் பார்த்தார். யாரும் வராததால் தனித்து விடப்பட்டார்.

வரும்போதே ஆட்சியில் பங்கு என்றுதான் வந்தீர்கள். காங்கிரஸ் உள்பட பல கட்சிகளை எதிர்பார்த்தீர்கள். ஆனால், யாரும் வரவில்லை" என்று தெரிவித்தார்.

ஆட்சியில் பங்கு தருவதாக தவெக தலைவர் விஜய் அறிவித்தபோதிலும், தவெகவுடன் கூட்டணி வைக்க கட்சிகள் தயங்குவதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. இதனிடையே, தவெகவும் காங்கிரஸூம் கூட்டணிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாகவும் அவ்வப்போது சமூக ஊடகங்களில் செய்திகள் பரவின. இருப்பினும், காங்கிரஸூக்கு 28 தொகுதிகள் அளிப்பதாக திமுக ஒப்புக்கொண்டதையடுத்து, தவெக - காங்கிரஸ் கூட்டணி என்ற கருத்து முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் விஜய்யின் தவெக இணையவிருப்பதாகவும் சமீபமாக சமூக ஊடகங்களில் கருத்துகள் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

# ரீல்ஸ் எடுத்து சமூகவலைதளத்தில் வெளியிட்ட மாணவர்களை முதலமைச்சர் பாராட்டியது தவறான முன்னுதாரணம்



**சென்னை, மார்ச்.16:** பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உலகில் ரீல்ஸ் மற்றும் செல்பி எடுத்தபோது ஏற்பட்ட உயிரிழப்புகளில் இந்தியா தான் முதலிடத்தில் உள்ளது. ரீல்ஸ், செல்பி குறித்த ஆய்வின் படி 2014 - 2025 காலகட்டத்தில் நடைபெற்ற 271 நிகழ்வுகளில் 214 பேர் உயிரிழந்துள்ளனர். உலக அளவிலான இறப்பு விகிதத்தில் இந்தியாவில் மட்டும் 42 சதவீதம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தனியாக "REELS DEATHS" என்ற அதிகாரப்பூர்வ தரவு இல்லை என்றாலும் கடந்த சில ஆண்டுகளில் ரெயில் மீது ஏறி ரீல்ஸ் எடுத்த போது மின்சாரம் தாக்கி உயிரிழப்பு, பைக் ஸ்டண்ட் வீடியோ எடுக்கும் போது விபத்தில் உயிரிழப்பு, அணை மற்றும் கடல் அருகே ரீல்ஸ் எடுத்த போது நீரில் மூழ்கி உயிரிழப்பு என்ற செய்திகள் நம்மை பாதித்ததை மறக்க முடியாது. ரீல்ஸ், செல்பி மோகத்தால் உயிரிழந்தவர்களில் 10-19 வயதிற்குட்பட்டவர்கள் 36 சதவீதமும், 20-29 வயதுவரை 45 சதவீதமும், 30-39 வயதுவரை 13 சதவீதமும், 40 வயதிற்கு மேல் 6 சதவீதம் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது சுமார் 80% மரணங்கள் 30 வயதுக்குள் உள்ளவர்களே. இவர்களில் ஆண்கள் - சுமார் 70-75 சதவீதமும், பெண்கள் - சுமார் 25-30 சதவீதமுமாகும். இவர்களால் எடுக்கப்படும் ரீல்ஸ்கள் மற்றும் செல்பிகள் INSTAGRAM, YOUTUBE, FACEBOOK போன்ற சமூக வலைதளங்களில் வெளியிடப்படுகிறது.

இளைஞர்களிடையே வேகமாக பரவிவரும் இம்மோகத்தை கட்டுப்படுத்த கர்நாடகா 2026-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ரீல்ஸ் உள்ளிட்ட சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை செய்யப்படும் என்று அறிவித்துள்ளது. ஆந்திரபிரதேசம் 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சமூக ஊடக பயன்பாட்டை தடை செய்யும் திட்டம் பற்றி பரிசீலித்து வருகிறது. கோவா 16 வயதிற்குட்பட்டவர்கள் சமூகவலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கலாமா என நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டுள்ளது. பல சமூகவலைதளங்கள் 13 வயதிற்கு கீழே உள்ளவர்கள் கணக்கு துவங்க அனுமதி இல்லை என கட்டுப்பாடு விதித்துள்ளது.

ஆஸ்திரேலியா, பிரான்ஸ், சீனா, தென் கொரியா உள்ளிட்ட நாடுகள் குழந்தைகள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கு கடுமையான சட்டங்கள் கொண்டு வரத் தொடங்கியுள்ளன. குறிப்பாக ரீல்ஸ், SHORT-VIDEO போன்றவைகளால் சிறுவர்களின் மனநலத்துக்கும் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் என்ற காரணத்தை முன் வைக்கிறது. இந்தியாவும் இது குறித்து ஆலோசித்துவருகிறது.

இந்த சூழ்நிலையில் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே சாத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த அரசு தொடக்கப்பள்ளியில் 2-ம் வகுப்பு படிக்கும் ஜீவா, 5-ம் வகுப்பு படிக்கும் தேவா ஆகியோர் ரீல்ஸ் எடுத்து இன்ஸ்டாவில் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பதிவிட்டனர். அவர்களை சென்னைக்கு வரவழைத்த முதலமைச்சர் "உங்களின் ரீல்ஸ் வீடியோ உருவாக்கம் நன்றாக உள்ளது. அதற்காக என் வாழ்த்துகள்" என உற்சாகப்படுத்தியுள்ளார். நன்றாக கல்வி பயின்று மாநில அளவில் முதல் 10 இடங்களை பிடிக்கும் மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் அது தவறில்லை.

அதே நேரம் ரீல்ஸ் எடுத்த பள்ளி மாணவர்களை உற்சாகப்படுத்தும்போது, அடுத்து அவர்கள் வெவ்வேறு கோணங்களில் ரீல்ஸ் எடுக்கவே மனம் விரும்பும், பாராட்டுக்கு ஏங்கும். இதை முன்னுதாரணமாக கொண்டு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்து கல்வியின் முக்கியத்தை சொல்லும்வகையில் மலைமீதும், ரெயில்மீதும், கடலிலும், நீர்வீழ்ச்சியிலும், என பல இடங்களில், வெவ்வேறு கோணங்களில் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணராமல் ரீல்ஸை உருவாக்க மாணவர்கள் யோசிப்பார்களே என்பதை ஏன் முதலைச்சர் யோசிக்காமல் விட்டுவிட்டார் என்று தெரியவில்லை. முதலமைச்சரின் இச்செயலை நான் தவறான முன்னுதாரணமாகவே பார்க்கிறேன் என்று கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com